# மொக்குள்

(பாடல், கவிதைத் தொகுப்பு)



'மறவன்புலோ' செல்லம் அம்பலவாணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொக்குள்

(பாடல் ,கவிதைத் தொகுப்பு )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் பிற நூல்கள்:

| | | |
|---|---|---|
| பஞ்சாமிர்தம் | சிறுவர்நாடகங்கள் | 2015 |
| சட்டத்தின் திறப்பு விழா | வானொலி நாடகங்கள் | 2016 |
| பஞ்சாயுதம் | நாடகங்கள் | 2017 |
| மனவைரம் | வானொலி நாடகங்கள் | 2018 |
| வண்டல் மண் | சிறுவர் இலக்கியம் | 2018 |
| விதை | நாடகங்கள் | 2019 |
| பொக்கிசம் | சிறுவர் இலக்கியம் | 2019 |
| சுமை | வானொலி நாடகங்கள் | 2020 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொக்குள்

## பாடல், கவிதைத் தொகுப்பு

ஆசிரியர்

**'மறவன்புலோ' செல்லம் அம்பலவாணர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'மொக்குள்'**

(பாடல், கவிதைத் தொகுப்பு)

(C) 'மறவன்புலோ' செல்லம் அம்பலவாணர்

முதற்பதிப்பு:2021

ISBN: 978-955-42626-9-0

பதிப்பாசிரியர்: செ.அம்பலவாணர்
478/28, அளுத்மாவத்தை வீதி,
கொழும்பு – 15
0714280809
ambalam9591@gmail.com

அச்சுப்பதிப்பு: குமரன் அச்சகம்
இல 39, 36ஆவது ஒழுங்கை
கொழும்பு – 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையவழி மூலமான

கவிதைப் போட்டிகளில்

பங்குகொண்டு

வெற்றிபெற்ற

எனது

பாடல் மற்றும் கவிதைகளின்
தொகுப்பு

என்

இலக்கியப் பயணத்தில்

மொக்குள் நிலை

பாடல் கவிதைத் தொகுப்பாக...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூக்கும் நிலைகள் பதின்மூன்று

| | |
|---|---|
| அரும்பு: | அரும்பும் (தோன்றும்) நிலை |
| நனை: | அரும்பு வெளியில் நனையும் நிலை |
| முகை: | நனை முத்தாகும் நிலை |
| மொக்குள்: | நாற்றத்தின் உள்ளடக்க நிலை |
| முகிழ்: | மணம் தொடங்கும் நிலை — மணத்துடன் முகிழ்த்தல் |
| மொட்டு: | கண்ணுக்குத் தெரியும் மொட்டு |
| போது: | மொட்டு மலரும்பொழுது காணப்படும் புடைநிலை |
| மலர்: | மலரும் பூ — மலரின் பூரண நிலை |
| பூ: | பூத்த மலர் |
| வீ: | உதிரும் பூ |
| பொதும்பர்: | பூக்கள் பலவாகக் குலுங்கும் நிலை |
| பொம்மல்: | உதிர்ந்து கிடக்கும் புதுப்பூக்கள் |
| செம்மல்: | உதிர்ந்த பூ பழம்பூவாகச் செந்நிறம் பெற்று அழுகும் நிலை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பு விவேகானந்தசபை
## ஸ்ரீசித்திவிநாயகர் ஆலய சிவாசாரியார்
# பிரம்மஸ்ரீ ப. ஸ்ரீதரசர்மா
## அவர்கள் வழங்கிய

# ஆசியுரை



அன்பே உருவான பரம் பொருளின் திருப்பாதம் பணிந்து கொழும்பு விவேகானந்த சபையின் சித்திவிநாயகப்பெருமான் அருளால், சபையின் சமயச் செயலாளராக கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக சிறந்த முறையில் பன்னிரு திருமுறை முற்றோதல் உள்ளிட்ட சகல சமய நிகழ்வுகளையும் மிக்க கரிசனையுடன் சைவ சமய அனுட்டானங்களை முறையாகப் பேணி முன்னின்று நடாத்திவரும் சிவனடியாரும், ஓய்வுநிலை தொலைத் தொடர்புப் பொறியியலாளரும், எழுத்தாளரும், கலைஞரும் ஆகிய மறவன்புலோ செல்லம் அம்பலவாணரின் "மொக்குள்" என்ற இந்தக் கவிதைத் தொகுப்பு நூலுக்கு ஆசியுரை வழங்குவதில் மிக மகிழ்ச்சி யடைகின்றேன்.

மானிடப் பிறவி என்பது பிறப்புகளில் சிறந்த பிறவியாகும். நாம் செய்த முன்வினைப்பயனால் கிடைத்த அரிய பிறவியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" அரிது அரிது மானிடர்
ஆதல் அரிது,
மானிடர் ஆயினும் கூன், குருடு, செவிடு,
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது,
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது,
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான்செயல் அரிது.."

என்று ஔவைப்பிராட்டியும் அழகாகக் கூறுகின்றார்.

இப்படியாக அரியதான இம் மானிடப் பிறவியில் அனைத்தையும் பெற்றபோதும் நாம் அதனைச் சரியாகச் செயற்படுத்தத் தவறுகின்றோமோ என்று நான் எண்ணியதுண்டு.

ஆனால் இந்நூலாசிரியர் செல்லம் அம்பலவாணர் அவையனைத்தையும் செயலில் காட்டுவது மட்டுமல்லாது மற்றவர்களையும் ஊக்குவித்து செயற்படுத்துவதை நான் அனுபவத்தில் கண்ணாரக் கண்டிருக்கின்றேன். சிவபுராணத்தில் கூறப்பட்டிருப்பது போன்று "சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்ல வேண்டும் .." என்பதில் அக்கறை காட்டிவருபவர்.

அப்படியான ஒருவர் தான் ஒரு பொறியியலாளராக இருந்து கொண்டு சிவத்தொண்டு, கலைத்தொண்டு மற்றும் சமூகத்தொண்டு என்பவற்றை ஒரே நேரத்தில் மேற்கொண்டு தனது பிரதான தொழிற்றுறையான பொறியியற்றுறை உட்பட அனைத்திலும் ஒரே நேரத்தில் உயர் சாதனைகளைப் படைத்து கௌரவங்களைப் பெற்றுள்ளமை நாமனைவரும் பெருமைப் பட வேண்டியதொன்று.

தற்பொழுது கவிதை எழுதுவதிலும் தனது திறமையை வெளிக்காட்டி, இணையத்தில் வெளியாகி வெற்றி பெற்ற கவிதைகளைத் தொகுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மொக்குள்" என்ற பெயரில் வெளியிட்டு வைக்கும் இத்தருணத்தில் நானும் அதற்கு ஆசியுரை வழங்குவதில் நானும் மகிழ்ச்சி யடைகின்றேன்.

ஏற்கெனவே எம்பெருமான் திருவருளால் எட்டு நூல்களை வெளியிட்டு பலபாராட்டுக்களைப் பெற்ற இவரது, "மொக்குள்" என்ற இக் கவிதைத் தொகுப்பு வெளியீட்டு முயற்சியும் வெற்றிபெற்று பாராட்டுக்களைப் பெறுவதோடு, தேக ஆரோக்கியத்தையும், நீண்ட ஆயுளையும் அறிவு விருத்தியையும் பெற்று மேலும் பலநூல்களையும் எழுதி தொடர்ந்தும் தமிழுக்கும் சைவசமயத் தொண்டில் ஈடுபட்டு சிறப்புற இன்புற்று வாழ எல்லாம்வல்ல சித்திவிநாயகப் பெருமானின் கிருபா கடாட்ஷம் கிடைக்கப் பிரார்த்தித்து நல்லாசிகளை நல்கிறேன்.

பிரம்மஸ்ரீ ப . ஸ்ரீதர சர்மா
கொழும்பு 13.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெதர்லாந்து,
தமிழ்ப்படைப்பாளர்குழும ஒருங்கிணைப்பாளர்
ஓய்வுநிலைதொலைத்தொடர்பு உத்தியோகத்தர்

# திரு. துரைசிங்கம் கிளீற்றஸ்

வழங்கிய

## ஆசியுரை



தமிழும் சைவமும் இரு கண்ணாகக் கொண்டு அரும்பணி ஆற்றி வருபவர் நண்பர் அம்பலவாணர். தொலைத் தொடர்புத் திணைக்களப் பயிற்சி நெறியில் தோளோடு தோளாக நின்று தோழமைக்கு இலக்கணம் வகுத்தவர். தொலைத் தொடர்புத் துறையில் மட்டுமல்ல கலைத்துறையிலும் உச்சம் தொட்டவர். தான் எழுதிய நாடகநூல்களுக்கு இருதடவை இலங்கை அரசின் சாகித்திய (சுயநாடக இலக்கியத்துக்கான அரச இலக்கிய) விருதும் சிறந்த வானொலிநாடகப் பிரதிக்கான அரச விருதும் பெற்றவர்.

திறமையும் உழைப்பும் அவருடன் கூடப் பிறந்தவை. எழுத்தாளர், கவிஞர், பேச்சாளர், நடிகர், கலைஞர், சைவத்தொண்டர், சமூகசேவகர், பொறியியலாளர் எனப் பன்முகத்தளங்களில் அவர் சேவைப்பாங்காக அமையும். அழகிய பெயர்கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் பிறந்த கிராமத்தின் பெயரைத் தன் பெயருடன் இணைத்து மகிழ்பவர்.

நாடகத்துறையில் நாடகப்பிரதியாக்கம் நடிப்பு என்பவற்றில் தடம்பதித்த இவர் தனது ஓய்வுகாலத்தின்பின், கொரோணாவின் தாக்கம் மற்றும் தனது தாயாரின் மறைவுகாரணமாக கோவில் நிகழ்வுகளுக்கு செல்ல முடியாத தருணத்தில் கவிதையாக்கத்தில் தன்னை ஈடுபடுத்தி, இணையமூலம் இடம்பெறும் பாடலாக்கம், கவிதைப் போட்டிகளில், சுற்றுச்சூழலில் இடம்பெறும் நிகழ்வுகளை உள்வாங்கி மனிதம்சிறக்க பயனுள்ள கவிதைகளாக வெளிக்கொணர்ந்து படைத்து, அவற்றில் வெற்றிபெற்றுச் சான்றிதழ் பெற்ற பாடல்கள், கவிதைகளைத் தொகுத்து "மொக்குள்" என்ற புத்தகமாகப் படைத்திருக்கிறார்.

மூடிவைக்கப்பட்டுள்ள சாளரங்களைத் திறந்து மண் மற்றும் மக்கள் சார்ந்து, அகக் கண்ணால் பார்த்து இலகுதமிழில் சுவைபட கவிமழை பொழிகிறார். சுறுசுறுப்பாக ஆறுபோல் ஓடிக்கொண்டிருக்கும் வாணரின் தேடல்கள் தொடர்ந்து பயணிக்க உடல்நலனையும் உளவளத்தையும் தந்து இறைவன் அருள்பாலிக்கட்டும்.

"வார்த்தைகளால் படைப்பதை விட
வரலாறாய் படைக்க நினைக்கிறேன்

என்ற கவிவரிகளை நினைவூட்டும் இம் முயற்சிக்கு என்றென்றும் என இதய ஆசிகள்.

துரைசிங்கம் கிளீற்றஸ்

நெதர்லாந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகசாதனையாளர், நிறுவுனர் புகழினி
பன்னாட்டுத் தமிழுயராய்வு இதழ் (இந்தியா)
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அரசுகலைக்கல்லூரி(தன்னாட்சி), கும்பகோணம்

# முனைவர் ஜெ. ஜெயவாணி ஸ்ரீ அம்மையார்வழங்கிய

## அணிந்துரை



இலங்கையைச் சேர்ந்த சிவனடியாராக எனக்கு அறிமுகமான சிவத்திரு மறவன்புலோ செல்லம் அம்பலவாணர் அவர்களின் இணையத்தில் வெளியான தனது கவிதைகளின் தொகுப்பான மொக்குள் என்ற இக்கவிதைத் தொகுப்பிற்கு சிவனடியார் என்ற நிலையிலிருந்து விலகி தமிழ்த்துறை உதவிப் பேராசிரியராக அணிந்துரை வழங்குங்கள் என்று கேட்டுக் கொண்டபோது ஓதுவார் என்ற நிலையிலிருந்து விலகி அவரது கவித்துவத்தையும் ரசித்து எனது அணிந்துரையை வழங்குகின்றேன்.

மொக்குள் எனும் இந்நூலின் ஆசிரியர் கவிதைகளைத் தொடங்கும் போது தமிழுக்கு, தமிழ் அன்னைக்கு, உலகாளும் தமிழுக்கு, முத்தமிழுக்கு என தமிழால் தன் தடங்களை எங்கும் பதித்து தமிழையே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூச்சாகக் கொண்டிருக்கிறேன் என்பதில் தம்தடத்தை வழங்கியிருப்பது வரவேற்கத் தக்கதாகும்.

இயற்கை அழகில் மயங்கிய ஆசிரியர் என் கிராமத்து அழகு எனும் கவிதையில் பறவைகளின் மொழி இயற்கையின் செழிப்பு, கற்றவரின் கற்பனைத் திறன் என தன்மன இளமை இரசிக்கும் பாங்கினை உலகிற்கு இயம்பியிருப்பது தனிச்சிறப்பு வாய்ந்ததாகும்.

இயற்கை வளத்தில் மிகவும் முக்கியமானது காலைப் பொழுதாகும். பொழுது தொடங்கும் போது இயற்கை எங்ஙனம் புத்துயிர் பெறுமோ அதுபோல் நம் மனமும் பெறவேண்டும் என்பதை புத்துயிரோடு ஒவ்வோர் மனதிலும் புகுத்தியிருப்பது வரவேற்கத் தக்கதாகும்

இன்றைய உலகமக்கள் அழிவின் பாதையினை நோக்கிச் செல்வதை ஆதங்கத்தோடு வெளிக்காட்டி புகை, குடிப்பழக்கம், போதை மருந்து என இன்றைய அடிமை பிடியிலிருந்து விலகி புதுவாழ்வில் வாழ கவிதை மூலம் வழிகூறியிருக்கின்றார் ஆசிரியர்.

திருநங்கைகளின் நிலையானது கானல் நீர் போன்று இருப்பதைக் கண்டு ஆதங்கப்பட்ட ஆசிரியர் அவர்களை அர்த்தநாரீஸ்வரருக்கு இணையாக மதித்து ஆண் என்றால் சிவன் பெண் என்றால் அம்பிகை எனப் படைத்து உள்ளதாகவும் கூறி, மற்றவர் உனக்கு எவ்வளவோ சோதனை தந்தாலும் அதனை சாதனையாக்கி நிமிர்ந்து நில் எனும் ஊக்கமூட்டி அவர்களின் நிலையை புனிதமாகக் காட்டியிருப்பது ஆசிரியர் உணர்ந்து, உணர்த்தி மனிதாபிமான அடிப்படையில் காட்டியிருப்பது சிறப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல் அனைத்து உறவுக்கும் காரணம் என்பதால் சிந்தித்து பேச வேண்டும். அச்சொல் இன்பம் தரவேண்டுமே தவிர தீயை மூட்டக்கூடாது என சொல்வன்மையோடு சொல்லியிருப்பது தனிச்சிறப்பு.

சிவன், புத்தன், நபி, ஏசு என தெய்வங்கள் மதங்கள் வேறுபட்டாலும் நாம் ஓரே சமுதாயமாக வாழவேண்டும் என்ற நிலையில் "வேற்றுமையில் ஒற்றுமை" எனும் கவிதையில் மதத்தை ஒன்றிணைக்க ஒரு முயற்சியும் செய்து தமது நாட்டின் பெருமையையும் கூறி ஊக்கமூட்டிக் காட்டியிருப்பது அருமை.

கொரோணா எனும் நோய் எமனாகவந்து உலகமே சிக்கி த் தவிக்கும் இக்காலகட்டத்தில் தன் காதலனை நீ உள்ளம் தளராமலிரு நான்இருக்கிறேன் என மன தைரியத்தையும் வாழ்வின் முக்கியத்துவத்தை உணர்ந்து உணர்த்தி நிற்கின்றன ஆசிரியரின் கவிதைகள்

அரசியலை ஆசிரியர் சிந்திக்கும் போது நாட்டை ஆளுவதற்கு நல்லோர் வேண்டும். சிந்தித்து செயல்படுங்கள் மக்களே! நல்ல தலைவர் நாட்டையும் நம்மையும் வாழ வைப்பார் எனத் தனது ஆதங்கத்தையும் கவிதைமூலம் கொட்டித் தீர்த்திருக்கின்றார்.

கடிதம் எழுதுவது அனைவருக்கும் ஒவ்வொரு கலை. ஆனால் ஆசிரியருக்கோ கடிதத்தையும் அழகாக மரபு மாறாமல் எதுகை மோனையுடன் பாடும் விதமாக கணவனின் பிரிவை ஆற்றாமல் அவள் படும் வேதனையையும், சொந்த மண்ணின் சிறப்பையும் அழகாக எடுத்துக் காட்டியிருப்பது வரவேற்கத் தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டார் இலக்கியத்தை கையிலெடுத்து மிகஇலாவகமாக இசையுடனான கவித்துவத்துடன் தான் அனுபவித்த கிராமவாழ்வின் அங்கங்களை எடுத்துக்காட்டி அவற்றில் தன் தனிமுத்திரையைப் பதித்துள்ளார்.இவர் கிராமத்துக் கவிதைகளில் பல வெற்றிகளைப் பெற்றிருப்பதே அதற்குச் சான்றாகிறது. இது இவரது சொந்த அனுபவமோ எனவும் எண்ணத்தோன்றுகின்றது. வேளாண்மை பாடல்கள் மறைந்து வரும் காலத்தில் "ஏர்ப்பாட்டு", "நாலுமூலை வயலுக்குள்ள நாற்று நடும் " எனும் நாட்டார் கவிதைகளில் நாட்டுப்புற இலக்கிய வாசனையையும் தமிழர் மரபு மாறாமல் யதார்த்த நிலையை அழகாக படம்பிடித்து வெளியிட்டிருப்பது ஆசிரியரின் நாட்டுப்புற இசை ஆர்வத்தையும் பறை சாற்றுவதுடன், கிராமத்துச் சூழலில் வாழ்ந்த அனுபவித்த வாழ்க்கையையும் வெளிக்கொணர்ந்திருக்கின்றது என்றே குறிப்பிடத் தோன்றுகின்றது

நான் கண்ட, பழகிய பன்னிரு திருமுறைகள் பாடுவதிலும் பொருள் கூறுவதிலும் முத்திரையைப் பதித்த இக்கவிதை நூலின் ஆசிரியர் சிவத்திரு அம்பலவாணர் "மொக்குள்" என்ற இக்கவிதை நூலின் மூலம் தமிழ்ப்பற்று, முத்தமிழ் உணர்வு, இயற்கை வருணனை, இயற்கை பேணுதல், மதபேதமின்மை, அரசியல், இளைஞர்களின் வாழ்க்கை மேம்பாடு, கற்றல், காதல், பக்தி, சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்களுக்கான (திருநங்கைகளுக்கு) ஆதரவு, சொற்களஞ்சியம் இயற்றல், ஆதங்கம், வைராக்கியம், சொல்வன்மை, நாட்டுப்புற இலக்கிய உணர்வு, நகைச்சுவை உணர்வு என அனைத்து துறைகளிலும் புலமையுண்டு என்பதை மெய்ப்பித்து காட்டியிருப்பது ஆசிரியருக்கும் நூலுக்கும் தனிச்சிறப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாம் எழுதும் கவிதை இந்த பூவுலகில் மலருமா? கணினி இணயத்தில் வலம் வருமா? என்னும் தன் நிலையில் ஒவ்வொரு கவிஞனும் எதிர்ப்பார்ப்பதையும் அழகாக சித்திரம் போல் செதுக்கி யிருக்கின்றார் ஆசிரியர்.

"மொக்குள்"என்ற இந்நூல் ஆசிரியரின் சாதனைக்கு அரிய பொக்கிசமாகும் இதில் வடிவமைத்துள்ள கவிதைகள் யாவும் ஏற்கனவே பல்வேறு தளங்களிலும் பகிரப்பட்டு, வாசித்து விருதுகளையும், பரிசுகளையும் பெற்றவை. படித்தோம் மறந்தோம் என்று இல்லாமல் தமிழ் இலக்கியத்திற்கு பிரதானமாக கிராமிய தமிழிலக்கியத்துக்கும் பெருமை சேர்க்கும் வகையில் வருங்கால சந்ததியினருக்கு ஒரு கொடையாக இந்நூல் விளங்கும் என்றால் அது மிகையாகாது.

எட்டு நூல்களை வெளியிட்டு அவற்றில் மனவைரம், விதை என்ற இரண்டிற்கு இலங்கை அரசின் அதியுயர் விருதான அரச கலாசாரத் திணைக்களத்தின் சாகித்திய விருதினை சுயநாடகம் என்ற துறையில் பெற்ற நூலாசிரியர் தனது ஒன்பதாவதுநூலாக, முதலாவது கவிதைத் தொகுப்பாக மொக்குள் என்ற இந்தநூலை வெளியிடுவது சிறப்பாகும்.

இவர் மென்மேலும் பலதுறைகளிலும் நூல்களை எழுதி வெளியிட்டு இலங்கையில் மட்டுமல்ல உலகரீதியில் தமிழ் பேசும் நல்லுலகில் சாதனைகளை நிலைநாட்டி தன் பொன்னான வாழ்நாள் என்றும் சிறப்புற்றதாக அமைய என் மனமார்ந்த ஆசியை வழங்குகின்றேன்.

நன்றி.
முனைவர் ஜெ.ஜெயவாணிஸ்ரீ
கும்பகோணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை ..



கொரோணா என்ற கொடிய வியாதி உலகளாவிய ரீதியில் பொருளாதாரம், அரசியல் உட்பட பல்வேறுதுறைகளில் வெளிப்படையாக பாரிய தாக்கத்தை, மாற்றங்களை ஏற்படுத்தியமை யாவரும் அறிந்ததொன்று.

அதேபோன்று கல்வி, தொடர்பாடல், ஆன்மீகம், பொழுதுபோக்குஅம்சங்கள், உட்பட்ட கலாசார வடிவங்களிலும் பாரிய புரட்சியை ஏற்படுத்தி உலகரீதியில் உறவுகளுக்கிடையே பிணைப்பை ஏற்படுத்தி, ஆரோக்கியமான சூழ்நிலையைத் தோற்றுவித்திருப்பதை (மாற்றுக் கருத்துக்கள் இருந்தபோதும்) எவரும் மறுக்க முடியாது.

அந்தவகையில் பணித்துறையில் ஓய்வுபெற்ற நிலையில் எனது ஆன்மீக மற்றும் கலையுலக வாழ்க்கையிலும் இந்த கொரோணாத் தாக்கமானது ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது என்றால் மிகையாகாது. நாடகத்துறை முற்றாகவே முடங்கி, ஆன்மீகத்துறை இணையவழி மூலமாக நடைபெற்ற நேரம். இணையவழி (சூம்) செயலிமூலமான திருவாசக, திருமுறை முற்றோதல்களில் பங்கெடுக்கும் பாக்கியமும் அதன்மூலம் எனது செயற்பாடுகளுக்கு அங்கீகாரமும் கிடைத்து, அதனைத்தொடர்ந்து புகழினி பன்னாட்டுத் தமிழாய்வு நிறுவனத்தின் இணையமூலம் பன்னிருதிருமுறை பாடலும் பயன் சொல்லுதலும் என்ற தொடர்ச்சியான உலகசாதனை நிகழ்வில் ஒரு சிவனடியாராக இலங்கையிலிருந்து எனது பங்களிப்பை வழங்கக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்கும்போது, இணையத்தில் எத்தனையோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச கவிதைக்குழுமங்கள் உயிர்த்துடிப்புடன் இயங்கி வருவதைக் கண்ணுற்றேன்.

பலவிதமான கவிதைப் படைப்புகள், போட்டிகள் உலகளாவியரீதியில் மிகப்பிரபல்யமான கவிப்பெருந்தகை களின் வழிகாட்டலில் இக்கவிதைக் குழுமங்களில் இடம்பெற்று, வெற்றிச்(மின்)சான்றிதழ், சிறப்புப் பட்டங்கள் போன்றவையும் வழங்கப்படுதலை இணையத்தில் கண்ணுற்றேன். நானும் ஏன் அவற்றில், அக்குழுமங்களில் இணைந்து கவிதைபடைப்பதற்கு முயலக்கூடாது என்று எண்ணினேன். எண்ணத்தைச் செயற்படுத்தினேன். முதல் கவிதைக்கே முதல் ஐந்து வெற்றியாளர்களுள் ஒருவராகத் தெரிவுசெய்து மின்சான்றிதழ் பெற்றுக்கொண்டமை எனனை என்மீது நம்பிக்கை வைத்து உற்சாகமூட்டியது. தொடர்ந்தேன். கிடைத்த வெற்றிகளும், பாராட்டுகளும், விமர்சனங்களும் என்னை மேலும் மேலும் கவிதை எழுதத் தூண்டின.

பெரும்பாலான கவிதைகள் தலைப்புக்கள், வரிகளின் எண்ணிக்கை, சொற்களின் எண்ணிக்க தொகை மற்றும் அவற்றுக்கான காட்சியமைப்பு போன்றவை குழுமத்தின் நிர்வாகத்தினரால் பதியப்படும். அவ்விதிகளைப் பேணியே நாம் கவிதை எழுத வேண்டும்

இப்படியாக எழுதிய பாடல்கள் மற்றும் கவிதைகளைத் தொகுத்து நூலாக வெளியிடலாமென எண்ணினேன். இத்துறையில் நான் முதன்முதலாக தொகுத்த தொகுப்பு என்பதனால்.. கலை உலகிற்கு என்னை கவிஞனாக அடையாளப் படுத்தப்போகும் நூலாகையால் "முகை" எனப்பெயரிட்டு ஐம்பது கவிதைகளை உள்ளடக்கிய மாதிரியைத் தயார்செய்து, இலங்கை தேசியநூலக ஆவணவாக்கல் சேவை சபையிடம் நூல் வெளியீட்டுக்காக நிதிஉதவிகோரி அதற்கான விண்ணப்பத்தையும் உரிய கட்டணத்தையும் செலுத்திச் சமர்ப்பித்தேன். அன்றிலிருந்து காத்திருக்கிறேன். ஆனால் இன்றுவரை ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றுகூட ஒருபதில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கவில்லை. அதுதான் அவர்களின் நடைமுறையோ நானறியேன்.

தொடர்ந்து கவிதைகளை எழுதிப் பதிவு செய்து பலவிருதுகளையும் வெற்றிச் சான்றிதழ்களையும், பாராட்டுதல்களையும் பெற்றுக்கொண்டிருந்தபோது இலங்கை கலாசாரத்திணைக்களத்தினது 2020ஆம் ஆண்டிற்கான சிறந்த சுயநாடக நூலுக்கான விருதுகள் அறிவிக்கப்படடு எனது விதை என்ற நாடகநூலுக்கு விருதும் பணப் பரிசிலும் கிடைக்கப்பெற்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் அப்பரிசில் பணத்தைப் பயன்படுத்தி, எனது மிகுதிக் கவிதைகளை நூலாக்கலாமென எண்ணினேன்.

மிகுதியாக கைவசமிருந்த விருதுகள், வெற்றிச் சான்றிதழ்கள் பெற்ற மேலும் ஐம்பது கவிதைகளைத் தொகுத்து மலரின் முகைக்கு அடுத்த நிலையைக் குறிப்பதாக "மொக்குள்" என்ற தலைப்பிட்டு வெளியிடலாமென முடிவெடுத்தேன். ஆம் "முகை" வெளிவர முன்னரே மொக்குள் தயாராகிவிட்டது.

பன்னிரு திருமுறை பாடுதலும் பயன் சொல்லுதலும் என்ற தொடர்ச்சியான உலகசாதனை நிகழ்வின் மூலம் அறிமுகமான முனைவர் திருமதி ஜெ. ஜெயவாணிஸ்ரீ அம்மையார் தனது பல்வேறு விதமான வேலைப்பழுவின் மத்தியிலும் கேட்டுக்கொண்டதற்கிணங்க தனக்கேயுரிய புன்சிரிப்புடன் சம்மதித்து, விரிவான அணிந்துரையை மகிழ்வுடன் மனமுவந்து வழங்கியிருந்தார்.

கொழும்பு விவேகானந்தசபை ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயகுரு சிவஸ்ரீ ப.ஸ்ரீதரசர்மா ஐயா வின் ஆசியுரையும், எனது அலுவலகநண்பனும், முன்னைநாள் தொலைத் தொடர்பு உத்தியோகத்தரும், நெதர்லாந்து தமிழ்ப் படைப்பாளர் குழும ஒருங்கிணைப்பாளரும் எனது கவிதைகளுக்கு தவறாது விமர்சனங்களை அவ்வப்போது அள்ளிவீசி என்னை ஊக்குவிப்பவருமாகிய நண்பர், கவிஞர் , காவலூர் மைந்தன் திரு. துரைசிங்கம் கிளீற்றஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் ஆசியுரையும் மொக்குளின் வாசத்தை மேலும் மெருகூட்டி மணம்பரப்புகின்றது.

பின்அட்டையினை அலங்கரிக்கும் நூலாசிரியர் அறிமுகத்தினை எனது பண்ணிசைவகுப்பு தோழரும் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரரது அடிமை எனத் தன்னை கூறுவதில் பெருமகிழ்வு கொள்பவரும் இரத்தினபுரி /நிவி /தலுகல தமிழ்வித்தியாலய ஆசிரியரும் MA பட்டதாரியுமான "மகிழ்கவி" த. சசிகாந்தன் அவர்கள் வழங்கியமை நான்செய்த பெரும்பாக்கியமே. கவிஞருக்கு கவிஞர்–சிவனடியாருக்கு சிவனடியார் அறிமுகம்

கலாசார அமைச்சினால் நடாத்தப்பட்ட 2020ஆம் வருட மற்றும் 2021ஆம் வருட கொழும்பு பிரதேச செயலக தேசிய இலக்கிய விழாவிலும் 2021ஆம் வருட கொழும்பு மாவட்ட தேசிய இலக்கிய விழாவிலும் திறந்த பிரிவு பாடலாக்கத்திற்கு முதலிடம் கிடைத்தமையை அடையாளம் கண்டு எனது கவிதைகள் நூலுருவில் வெளிவந்தேயாகவேண்டும் எனத் தனது அறிவுரையை வழங்கி எனக்கு ஊக்கமளித்த கொழும்பு பிரதேச அலுவலக கலாசார உத்தியோகத்தர் திருமதி கிறிஸ்ரி றோஸ் அம்மையார் அவர்களிற்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டு எனது ஆறுநாடக நூல்கள் (இரண்டு அரச சாகித்திய விருது பெற்றவை) மற்றும் இரண்டு சிறுவர் நூல்களிற்கு வழங்கிய அங்கீகாரத்தினை "முகையை" முந்திக் கொண்டு வரும் "மொக்குள்" என்ற இந்த இணையத்தில் வெளிவந்த, வெற்றி பெற்ற எனது பாடல்கள் மற்றும் கவிதைகளின் தொகுப்பான மொக்குள் என்ற இந்த கவிதைத்தொகுப்பிற்கும் வழங்குவீர்கள் என எண்ணி அம்பலத்தாடியான் பாதம் பணிந்து உங்கள்முன் சமர்ப்பிக்கிறேன்.

நன்றி

உங்கள் அன்பு அம்பலம்

மறவன்புலோ

17.11.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொக்குளின் உள்ளே ..

**அ. தமிழன்னை..**

1. வெண்பா கவி .. புத்தகம் வாசித்து
2. வாழ்க தமிழ் .. குமரியில்பிறந்து..
3. தமிழ் அன்னையே .. கல்தோன்றி..
4. வீழ்வாயோ தமிழே.. பொதிகையில்..
5. உயிரான தமிழே..
6. சொல்லில் முதிர்ந்த தமிழ்..

**ஆ. சமூகம்..**

7. எழுதியதுவிதியோ எமக்குத்தான் சோதனையோ..
8. என்கிராமத்தின் அழகு..
9. விடியல்காலைப் பொழுது..
10.புதுவசந்தம் பூக்கட்டுமே..
11.கற்றுக்கொள் கற்றுக்கொடு..
12.கானல்நீர்க்கவிதைகள்.. திருநங்கையின் வாழ்வு..
13.அறம் செய விரும்பு
14.வேற்றுமையில் ஒற்றுமை.. தாய்நாடு..

**இ. மெட்டுக்குப் பாட்டு..**

15.ஏன்பிறந்தாய் மகனே... "ஏன் தெரிந்தாய் .."
16.நானாக நானில்லைத்தாயே.. நாடாளநல்லோனைத்..
17.பூவே பூச் சூடவா.. "கவிதை நான் பாடவா.."

**ஈ. கவிதையில் கலைச்சொற்கள்..**

18.கவியும் கவியரசும்..
19.வாடிபெண்ணே கூடிவாழ்வோம்..
20.வரட்சி..

**உ. கிராமத்துப் பாடல்கள்..**

21.தாலாட்டு – கற்கண்டே நீ உறங்கு..
22.ஆசையுள்ளஅத்தானே ஆடுமேய்க்கப் போகலாமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23.கைப்பிடிக்க வாடா. ஏன் கறுத்த மச்சானே.

24.காத்திடுவேன் இதுசத்தியம்

25.ஓரவிழிப் பார்வையாலே..

26.குறுகுறுக்கும் பார்வையாலே..

27.ஏர்ப்பாட்டு.. கார்காலம் தான் பிறந்து..

28.அத்தானே ஒனக்காக ஆசையில ஒரு கடிதம்..

29.நாலுமூல வயலுக்குள்ள நாத்து நடும்..

30.கலங்காதே ராசா காலம் பிறக்கும்...

31.சுகவாசல் .. கிராமத்துச்சாரல்..

32.மாந்தோப்புக் கிளியே. மனசெல்லா் நீதானே.

33.ஓடியமேகம்..

34.வடக்காலைவகிடெடுத்து வானில் முகிலும்..

35.இயற்கையைப் போற்று இயமன் விரட்டு

36.குன்றின் குரல் —காலைக் கருக்கலிலை..

37.என்னுயிரே அழகு

38.உசிரே உருகாதே ஒனக்காக நானிருக்கேன்..

39.விறகொடிக்கப் போறவளே..

40.ஒத்தையிலை நிக்கிறனே உன்நினைப்பு....

41.கும்மியடி..

42.மாட்டுவண்டிச்சவாரி—சோடியாய் ரெண்டு மாடு..

43.பாடல் — நிலவுக்குத் தாலாட்டு..

44.தந்துவிட்டேன் என்னை..

45.பேரழகிக்கொண்டையிலே பூஅள்ளிச் சூடட்டுமா..

46.ஐரைமீனும் ஆரை மீனும்

47.வீரம் விளைந்த மண்

48.தரணி எல்லாம் எங்கள் தாயகமே

**உ. இணையவழிக் கவியரங்கம்..**

49.நாடுவல்லரசாக எதுதேவை

50.எதனைத் தெரிந்தெடுப்பது ------------------------------→



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ. தமிழன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. புத்தகம் வாசித்து – வெண்பா கவி

புத்தகம் வாசித்து பெருக்கிடும் அறிவினால்
எத்திக்குச் சென்றாலும் எழுந்துநிற்பாய் – உன்
புத்தியைத் தீட்டிடும் கத்தியாம் கண்டிடு
புத்தகம் ஆளும் கவி

ஊ.ல.ழ.ள குழுமம்.. 15.10.2021

'வெண்பா வித்தகர்' விருதைப் பெற்ற கவிதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. வாழ்க தமிழ்

குமரியில் பிறந்து பொதிகையில் தவழ்ந்து
சிந்து நதியினிலில் வளர்ந்த குமரியே
குமரியில் அமிழ்ந்து குதூகலம் இழந்து
குறுகி ஒடுங்கினேன் என்று கலங்காதே.. ..

மண்தோன்றாக் காலத்தில் மலர்ந்திட்ட மங்கையே
எங்கள் தமிழன் னையே நீ வாழ்க..
தொன்மையுடன் முன்மையும் செம்மையுடன் மும்மையும்
கொண்ட தமிழன்னையே நீ வாழ்க.. ..

காதினிலே 'குண்டல'ம் கை 'வளையாபதி'
தாளில் 'சிலம்பு'ம் 'சிந்தாமணி'முடிதனில் சிறப்புற
தேடிடும் மெல்லிடை 'மேகலை' கொண்டுமே
பாடியே அன்னையை அலங்கரித்தோம்.. ..

பாங்குடைப் புலவர்கள் பயின்றிடு தாயே
பண்புடன் பார்மீது பரந்து வாழ்க!!
தீங்ககல் நலனுறு செந்தமிழ்த் தேவீ
சீருடன் அன்னையே சிறந்து வாழ்க!!..
சீருடன் அன்னையே சிறந்து வாழ்க!!..

செந்தமிழ்க்கவி குழுமம்.. 11 .12 .2020
'கவிச்சுடர்' விருதைப் பெற்ற கவிதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. தமிழ் அன்னையே .. ..

கல்தோன்றி மண்தோன்றாக் காலமதில்
காசினியில் கண்சிமிட்டி
திங்களொடும் செழும்பரிதி தன்னொடும்
விண்ணோடும் உடுக்களோடும்
பொங்கு திரை மங்குல்கடல் இடியோசை
இவற்றோடும் தான்உதித்த
எங்கள் தமிழன்னையே உன்பாதம்
பணிந்துமே வணங்கி நின்றோம் .. ..

குமரியில் பிறந்து பொதிகை
மலையினில் தவழ்ந்து
சிந்தில் குமரியாய் வளர்ந்து
சீர்சனம்தேடி —உலகப்
பொந்துகள் அனைத்தும் தீண்டி
பொற்கொடியாளே நீயும்
முந்தியமொழி நான்என்றே
முடிசூடி நின்றாயம்மா .. ..

இனிமையுடன் எளிமைகொண்ட நீர்மையுடை
செல்வியென நிகண்டுகூற
இலக்கியச்சுவை கொண்டு இலக்கணச்
செழுமையுடன் இளமையாகி
தொன்மையுடன் முன்மை மும்மை
செம்மை கொண்ட செல்வமே
ஒண்மையோடு திருமை பெற்ற இனிமையான
எம் தாயான தமிழன்னையே..

அகத்தியமோ தொல்காப்பியமோ
அன்னையை மு(த)ன் அலங்கரிக்க
முதல் இடை கடை என முச்சங்கம்
அமைத்துமே முழுமை கொண்டாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செகத்திலே செங்கோலை நாட்டியே
சீர் பெற்ற மூவேந்தர் சபை தன்னை
இயல் இசை நாடகமாய்ச் சிறப்பித்த அன்னையே
சீர்பலவும் பெற்று வாழ்க ..

பாங்குடைப் புலவர்கள் பாரதனில்
பாவையுனைப் புகழ்ந்து பாட
காதொளிரும் குண்டலமும் கைக்கு
வளையாபதியும் கருமை முடியில்
மீதொளிர் சிந்தாமணியும் மின்னிடையில்
மேகலையும் அணிகலனாக
பாதமதில் சிலம்பதுவும் பாவையுனை
அலங்கரிக்க மகிழ்ந்தோம் அம்மா ..

போதாத காலமம்மா பொற்கொடியாள்
உந்தனுக்கு எங்கள்தாயே
தேறாத விதியதுவோ ஆறாது
எம்மனது தவிக்குதம்மா
கூறாது குமரியில் வந்தெழுந்த
சீற்றமது கொடுமைகள் செய்ததாலே
ஆறாத வடுவாகிப் போனதோ
உன்வாழ்வு எங்கள்தாயே ..

பிந்தியே வந்தவர்கள் புறந்தள்ளி
உன்னையே வைத்ததாலே
விந்தைகள் புரிந்த நீ விடுகதையாகியே
விழி பிதுங்கி நின்றாய்
முந்திய சுவட்டையே தேடி உன்
மூதாதை கதையைக் காட்டி
கந்தையாய் நிற்கும் உன்னை
கலியுக நாயகி ஆக்கிடுவோமே ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்மொழி யாயிருந்து கன்னி மொழியாக மாறி
கணனி மொழியாகினாயே
காலமது சிதைத்தாலும் தோணிபுரம்போல்
மிதந்து தோண்டவே வெளிக்கிளம்பி
காலத்தின் கோலமதால் கண்ணயர்ந்து போனாலும்
கவலைகளை விட்டு விடம்மா
கலியுக நாயகியாய் கால் பதிக்கும் நாள் வருமே
கண்டுமே நீ களித்திடம்மா ..!!

உலகத் தமிழ் பண்பாட்டுச் சங்கம் — குளம்நிறையப் பூக்கள் — கவிதா நிகழ்வு 11.03.2021

## 4. வீழ்வாயோ தமிழே..

பொதிகையில் பிறந்து இமயத்தில் பறந்து
குள்ள அகத்தியர் கரத்தில் தவழ்ந்து
மெள்ள குமரியில் கோலோச்சி —வெள்ளத்தால்
குமரியது அமிழ குமிழியாய் எழுந்தாய் ..

ஐம்பெருங் காப்பியம் உன் அணிகலனாக
அரும்பெரும் பத்துப்பாட்டு என்றஆடை உடுத்தி
கம்புறு பதினெண்கீழ்க் கணக்கினால் போர்த்தி —தொல்
காப்பிய இலக்கண வரையறை கொண்டாய் ..

தரணியெல்லாம் உன்னைத் தலையிலே சுமந்து
தாம்கொண்ட இயல் இசை நாடகமமைத்து
இறைமொழி நீஎன விறல் கொண்ட போதும்
பிறமொழி வந்ததால் நீவீழ்வாயோ தமிழே ..!!

செந்தமிழ்க்கவி, குழுமம்.. 04.11.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. உயிரான தமிழே..

உயிரான தமிழே உலகாண்ட தமிழே
உயிரோடு மெய்கொண்டு உறவாடும் தமிழே
உயிராக உலகத்தில் முதற் தோன்றி நின்றாய் — நீ
உயிரோடு குமரியில் புதையுண்ட தேனோ ..

இயலோடு இசைகொண்டு அசைவோடு நின்றாய்
அயராது அகத்தியர் கரத்தில் தவழ்ந்தாய்
புயலோடு கடல்பொங்கி புனல் மேவிநீயும்
உயிரோடு குமரியில் புதையுண்ட தேனோ ..

இயலாது என்ற[illegible] ஒன்றில்லை என்றே
துயிலாது எம்மவர் கல்லில் பொறித்தார்
ஒயிலாக உலகினில் கோலோச்சினாயே — நீ
உயிரோடு குமரியில் புதையுண்ட தேனோ ..

வெயிலோடு மழைவந்து சிதைப்பதும் இல்லை
புயலோடு அலைவந்து மறைப்பதும் இல்லை
அனலோடு அடங்கிய பீனிக்ஸ் பறவையைப் போல
விறலோடு எழுந்துவா விண்முட்ட ஆள ..!

சங்கத் தமிழ்க் குழுமம்.. 11 .12 .2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. சொல்லில் முதிர்ந்த தமிழ்...

சொல்லில் முதிர்ந்ததமிழ் சொல்லால் பரந்ததமிழ்
கல்லில் எழுதியதால் காலமதை உரைக்கும்தமிழ்
பல்கிப்பெருகி நின்று பழம்பெருமை பேசும்தமிழ்
நில்லா உலகினிலே நிலைத்திருக்கும் எங்கள் தமிழே .. .

உயிரோடு மெய்சேர்ந்து உயிர் கொடுத்தது எங்கள் தமிழ்
இயலோடு இசை சேர்த்து நாடகமும் கொண்ட தமிழ்
வயலோடு வாழ்வதனில் வளமாக வளர்ந்த தமிழ்
புயலோடு மழைவந்து புதைத்ததுவும் எங்கள் தமிழே . ..

தொல்காப்பியமதனால் தொன்மைதனைப் பேசும் தமிழ்
நல்காப்பியம் ஐந்தை நல் நகையாய் அணிந்த தமிழ்
பல்கிப் பதினெண்கீழ்க்கணக்குடன் பத்துப்பாட்டும் கொண்ட தமிழ்
கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே கனிந்த தமிழே .. ..

சொன்னால் செழுமைபெறும் செல்வமது எங்கள் தமிழ்
முன்னாள் குறுமுனியால் முதிர்ந்து பரந்ததமிழ்
பன்னாள் பதறாது உன்நாவால் உரைத்துவிடில்
உன்னால் முழுமை பெறும் உயிரான நம் செந்தமிழே .. ..

செந்தமிழ்க்கவி குழுமம்.. 09.03.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆ. சமூகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. எழுதிவைத்த விதியதுவோ எமக்குத்தான்..

குமரியதுஅழிந்து இன்று குந்தியிருக்க நிலமின்றி
கொடிபிடித்த தமிழினம் பிறர் கோடிகாக்கத் தூங்குவதும்

வடிவமைத்த அரணெல்லாம்
மண்ணுள் மாண்டுபோக
கண்ணில் தெரிவதெல்லாம்
கொடியவர்கள் மறைப்பதுவும் ..

நெடிதுயர்ந்த வளமெல்லாம் கொடிய யுத்தம் கொண்டுபோக
பிடிஅரிசிக்கு கையேந்தி குடிசையினில் வாழ்வதுவும் ..

குடிசைதனில் வாழ்வதனை
கடுஞ்சட்டம் கொண்டுவந்து
நடுகல்நட்டு நமக்கில்லைஎன
நடைப்பிணமாய் ஆக்குவதும் ..

சட்டங்கள் கலைக்கையிலே அடுத்தடுத்து உன்
கொட்டங்கள் வந்தெம்மை நிலைகுலைய வைக்குதம்மமா..

சுனாமியென வந்து
சுருட்டிக்கொண்டு சென்றாய்
தப்பின சனங்களையும்
சிப்பிலி ஆட்டுகின்றாய் ..

ஆண்டது தப்பினாலும் அவதியது தப்பாதென
ஆண்டுக் கொருதரம் எம்மைஆட்டிப் படைக்கின்றாய் ..

வேதனையால் மீண்டஎம்மேல்
சோதனைகள் போதுமென்று
மாண்டு மடியுமுன்பு
வேண்டுகின்றோம் உன்னைஅம்மா ..

எழுத்தாணி.. 08.04.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. என் கிராமத்தின் அழகு...

அதிகாலை தான் அழகு
அழைக்கும் சேவல் இசையழகு ..
அதுவேளை ஆலயத்தில்
அடிக்கும் மணி தானழகு..

காலைதனை வரவேற்கும்
கரையும் காகம் தானழகு
அதைக்கேட்டு இசைபாடும்
குருகினங்கள் தானழகு..

அடிவானில் கருமுகிலை
கடித்துதறும் கதிர் அழகு ..
கதிர்கண்டு கண்விழிக்கும்
கமலமலர் தானழகு .. .. ..

முற்றிய பனித்துளிகள்
முழுகுவதும் தான் அழகு ..
பற்றிநின்ற இருளதுவும்
பயந்து ஒழிவதும் அழகு .. .. ..

முற்றத்தை தான் பெருக்க
முடிந்த கூந்தல் தான் அழகு ..
பற்றிநின்று பவுத்திரமாய்
வரைந்த கோலமும் அழகு .. .. ..

கற்றவர்கள் ஓதுகின்ற
கற்பனைகள் தான் அழகு
முற்றாத சிறிசுகளின்
முழுச் சிரிப்பும் தானழகு..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றை நடை வரப்பதனில்
ஒய்யார நடை அழகு
முற்றியே முகம் கவிழும்
நெற்கதிர்கள் தான் அழகு..

வயல் நடுவில் தானமைந்த
வளமான குளமழகு
வாலிபமும் வயோதிபமும்
நீராடும் நிலை அழகு..

தேரோடும் வீதியில்லா
தெருக்கோயில் தானழகு
ஊரோடு உறவாடும்
உருஆடும் முறைஅழகு..

வற்றிய தோலுடனே
வயோதிபத்தின் நடைஅழகு
வெற்றாக வீம்பளக்கும்
வாலிபத்தின் திமிரழகு

முற்றத்து தனிப்பனையின்
முழுநிழலும் தானழகு
முட்டியிலே எட்டிப்பார்க்கும்
முழுநுரையும் தானழகு..

வெட்ட வெளிதனிலே
வெளிக்கிருப்பதும் அழகு
வேப்பமரக் குச்சியதால் பல்
விளக்குவதும் தானழகு..

பட்டியிலே கட்டிநிற்கும்
பாற்பசுக்கள் தானழகு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால்சுரந்து கன்றதனை
பாடி அழைப் பதும் அழகு..

கொட்டிலிலே கட்டிநிற்கும்
காளைகளும் தானழகு
மெட்டிஒலி தானொலிக்க
பட்டி பெருக்குவதும் தானழகு..

முட்டமுட்ட நெல் மணிகள்
கூடையினுள்ளே அழகு
பெட்டகத்துள் பேணிவரும்
பொக்கிசமும் தானழகு

வேரோடு வழிவந்த
பேர்சொன்ன கலைகளெல்லாம்
ஊர்க்கோடி தன்னிலே
உலவிடுதல் தானழகு

ஏரோடும் கடலோடும்
எம்மக்கள் வாழ்வழகு
ஏழ்மையது எட்டாத
எந்தனது ஊரழகு

கட்டி வைத்த அழகெல்லாம்
காலத்தின் கோலமாக
முட்டி மோதி முடிந்தகதை
மூச்செறிந்து எண்ணுகிறேன் — பெரு
மூச்செறிந்து எண்ணுகிறேன் .. .. ..

நிலாமுற்றம் — 12.11.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. விடியல்.. காலைப்பொழுது...,

எழுந்த சேவலோ குரல் எழுப்புது
மகிழ்ந்த தாமரை இதழ் விரிக்குது
முகிழ்ந்த மொட்டெலாம் கண் விழிக்குது
மகிழ்ந்த வண்டினம் ரீங் காரம் பாடுது.. ..

கோவில்மணி எலாம் ஒலி எழுப்புது
நாவின் அசைவெலாம் நமனைப் போற்றுது
பாவின் இசையெலாம் பாரை ஆளுது
மேவும் ஒளியினால் இருளும் விலகுது.. ..

பூவின் மணமெலாம் புவியை ஆளுது
பூசை காணவே மாலை ஆகுது
ஆவின் இனமெலாம் கன்றை அழைக்குது
ஆசையாய் கன்றும் தாயை தேடுது.. ..

காக் காவின் குலமெலாம் கலையத் தொடங்குது
கூக்கூ குயிலினம் குரலைக் காட்டுது
தேக்கம் பொந்தையே ஆந்தை அடையுது
புங்கில் வெளவாலோ தலைகீழாய் தொங்குது.. ..

உழவன் குடிலது சல சலக்குது
மழலைகள் குரல் மலிந்து மெளனிக்குது
விளையும் நிலத்துக்கே விரைந்து சென்றிட
பழைய சாதத்தை பரணில் தேடுது.. ..

கடலை நோக்கியே கலைந்த ஓடமே
திடலை நோக்கியே திமிறி வருகுது
கடலில் ஓடியே கனத்த மீனதை
உடலில் ஒடுக்கியே ஓடி வருகுது.. .. ..

எழுந்த ஞாயிறு உலவப் போகுது
உமிழ்ந்த முகிலினம் உவகை கொள்ளுது
விழுந்த பனித்துளி விலகி ஓடுது
விடிந்தும் விடியாத காலைப் பொழுதிலே.

**கவிதைக் குவியல் 06.07.2021.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. புதுவசந்தம் பூக்கட்டும்.. .. ..

தினமும் உன்னை வாழவைக்கும்
பஞ்சுமெத்தையாம் — அதை
பணம் கொடுத்து புகையை வாங்கி
பாழடையச் செய்வதோ
மனத்தைக்கெடுத்து மனிதவாழ்வை
மரணப்பொறிக்குள் தள்ளிடும்
புகையைத் தவிர்த்து புனித வாழ்வு
வாழ்ந்திடுவோம் புவிமீதிலே ..!

சற்றுநேர இன்பத்துக்காய்
சகதியினில் விழுவதோ
சுற்றம் உற்றம் வெறுத்தொதுக்க
வேதனையில் வாழ்வதோ
முற்றுமே மறந்திடும்
முழுக்குடியைக் கெடுத்திடும்
கேட்டதான குடிப் பழக்கம்
உந்தனுக்குத் தேவையா ..!!

மனித இனமே மாண்பு மிக்க
வாழ்க்கை தன்னை வாழவே
இனிமையான இல்லறத்தை
ஈந்துள்ளான் எம்இறைவனே
மனதில்தன்னும் மறுமனை
தொடாத கொள்கை கொண்டுமே
புனித வாழ்க்கை வாழ்ந்திடில்
புகமுடியா நோய்களே ..!

பாதைமாறிச் சென்ற பயணம்
வேறு முடிவில் நிற்குமே
போதைவழியில் செல்லும் பயணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதவாழ்வைச் சிதைக்குமே
மாதை மகவை, மனையை மகிழ்வை,
மரணிக்கவே செய்யுமே
போதை உனக்கு பொய்யைக் காட்டிப்
புதைகுழிக்குள் தள்ளுமே..!!

நாதியற்ற மனிதனாக
நானிலத்தில் வாழ்வதா
பாதிவயதில் பருவவாழ்க்கை
பாழாகத் தான் விடுவதா
பாதை மாறிப் பயணம் செய்து
பாழ்ங்கிணற்றுள் வீழ்வதா
போதையற்ற வாழ்வு தன்னை
பொலிவினோடு வாழ்ந்திடு

போதையற்ற பொலிந்த வாழ்வு
பொறுமையாக வாழ்ந்திடில்
தாதைதந்தை மனைவி மக்கள்
தலையில் வைத்து மகிழ்வரே
போதையற்ற வாழ்வினாலே வீட்டினில்
புன்னகைதான் மலருமே
புன்னகைக்கும் வாழ்வினாலே
புதுவசந்தம் பூக்கட்டுமே..!!
போதையற்ற வாழ்வினாலே
புதுவசந்தம் பூக்கட்டுமே..!!!

உலகத் தமிழ்ப் பண்பாட்டுச் சங்கம்
இணையவழிக் கவியரங்கம் – 27.06.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. கற்றுக்கொள் கற்றுக்கொடு

இறைத்து தோண்டவே ஊறும்
அந்தக் கிணற்றின் தன்மையறிவாயோ..
கறக்கக் கறக்கவே சுரக்கும்
கறவைப் பசுவின் தன்மை அறியாயோ..

வெட்ட வெட்டத்தான் தழைக்கும்
அந்த மரத்தின் தன்மைஅறியாயோ..
பட்டைதீட்டவே மிளிரும்
வைரம் என்பதை நீ அறியாயோ..

தீட்டத் தீட்டவே கூர்மை
பெறும் கத்தி என்பதறிவாயோ
கேட்கக் கேட்கத்தான் இனிக்கும்
இசை கேட்டுப் பார்த்து ரசியாயோ..

தணலில் போட்டிடில் தங்கம்
தன்னைக் காட்டும் அறிவாயோ
அனலில் காய்ச்சிடும் இரும்பு அது
ஆக்கும் எதையும் அறிவாயோ..

செழிக்கவேண்டுமெனில் பயிர்தான்
களையெடுக்க வேண்டும் அறிவாயோ
செதுக்க வேண்டுமெனில் சிற்பம்
கல்லைச் சிதைக்க வேண்டும் அறிவாயோ..

கற்றுப் பெற்றுவிடு அறிவை அது
காலம் முழுதும் உனைக்காக்கும்..
பெற்ற அறிவையே கொண்டு
பேர் பெற்று வாழ்ந்திடுவாய் மண்ணில்..

கற்ற அறிவுடன் நீயும்
பெற்ற அறிவையும் கலந்து..
கற்றுநீ கொடு மற்றவர்க்கே
ஏற்றும் உன்னையும் அவர்களையுமே...

எழுத்தாணி — 19. 08. 2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. கானல் நீர்க் கவிதைகள் — திருநங்கைகளின் வாழ்க்கை

தப்பின்றி (அப்பன் அம்மா) இணைந்துமே
தரணியிலே நாம்பிறந்தோம்
தப்பெதுவும் செய்யாமல்
உமக்குநாம் தப்பானவர்களானோம்
முப்பொழுதும் அறிந்த (திரு) மூலர்
முழுமையாக உரைத்திருந்தும்
இப்பொழுதும் இவ்வுலகம்
எமைஇணைக்க மறுப்பதுவேன்..

எண்ணங்கள் தான்கொண்டு
ஏகனாம் அர்த்தநாரீசன் எமை
வண்ணங்கள் தான்கொண்ட
பெண்போலவே படைத்தான்
வண்ணங்களாய்ப் பறக்கும்
எம்வளமான எண்ணங்களை
மண்ணிலேஊறாத கானல்நீராக
எண்ணி இழித்திடலாமோ..

பிறக்கையிலே தெரியாத
படைத்தவனின் ரகசியத்தை
பருவம்பறக்கையிலே நாம்உணர
பரிகசித்துப் பழிசொல்லும்
மனுக்குலமே அறிவீரோ
மாற்றம் நாம்தேர்ந்து எடுத்ததல்ல
படைத்தவனின் விளையாட்டின்
பாகமென்று அறிவீரோ...

ஆணாகில் தெய்வமதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனென்று ஏற்றுகின்றீர்
பெண்ணாகில் அவ்வுருவை
அம்பிகையாய் அடிபணிவீர்
ஆண்பெண்ணாய் இருப்பவரை
அருள்கொடுக்கும் அர்த்தநாரீசுவரரென்பீர்
( மீண்டும்.. ஆண்பெண்ணாய் இருப்பவரை
அருள்கொடுக்கும் கோலமென்பீர் )
அவ்வுருவம் பெற்றஎம்மை
அவதூறாய் ஒதுக்குவதேன்..
( மீண்டும்.. அவ்வுருவம் பெற்றஎம்மை
அலங்கோலமென்பதுமேன்.. )

எமக்குமோர் கனவுண்டு
கனத்ததோர் இதயமுண்டு
எண்ணியதை சாதிப்போம்
என்றமனத் துணிவுமுண்டு
தடுப்பாக இருப்பவற்றை
உடைத்தெறிந்து எம்மாலும்
மிடுக்கான சாதனைகள்
படைக்கவே முடியுமன்றோ.

சோதனைகள் மிகுந்திடினும்
சாதனைகள் தான்புரிந்து
போதனைகளை உமக்கும்
புரியும்படி நாம்படைத்து —உம்
பேணாத பெட்டகத்தின்
பொக்கிசம் என உணர்த்தி — எம்கனவுகள்
கானல்நீரல்லஎன உங்கள்
கண்முன்னே காட்டி நிற்போம்
கானல்நீரல்லஎன உம்
கண்முன்னே காட்டி நிற்போம்

**ஊ.. ல.. ழ ள.. கவியரங்கம் 04. 07. 2021**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. அறம் செய விரும்பு

அறம்செய விரும்பு என்பதை நீயே
அறிந்திடு தெளிவாய் ஆறறிவோனே
நிறமது இருந்திடும்வேளையில் தானே
மலரது மாலையாய் சூடிட வேண்டும்
அறஞ்செய திறனது இருந்திடும் போதே
ஆதரவுடனே அடுத்தவர்க்கு உதவ
திறந்திடவேண்டும் மனதினைத்தானே
தெளிவுடனேயே தொடர்ந்திடு பண்பு..

கறவையின் கநற்தநற்தபால்
கருணையைக் குறிக்குதே
எறும்பினது சேமிப்பு
நிறைவையேகுறிக்குதே
முறைமுறையாகவே இதை
முழுமையாய் உணர்ந்து
நிறைந்ததை பகிர்ந்திடு
சிறந்துமே வாழ்ந்திடு..

இறைத்திடும் கிணறுதான்
ஊற்றினால் நிறையுமே
குறைத்திடின் கிளைகளை
துளிர்த்திடும் மரமுமே
பொறுத்திடும் நிலமதே
புதுமணம் பரப்புதே
கொடுத்திடு கொள்கையாய்
உடைந்திடும் தடைகளே..

அறமென்று சொல்கையில்
பணமென்று எண்ணாதே
நிறைவாக உள்ளது
எதுவென்றும் பாராதே
குறைவாக உள்ளோர்க்கு
பகிர்ந்திடு உளத்தாலே — மறவாதே
அறமதே காத்திடும்
மண்வாழ்வில் உன்னையே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசிக்கின்ற வயிற்றுக்கு
(சோற்றுப்) பருக்கையைப் பகிர்ந்திடு
தனித்துள்ள வயோதிபத்தை
தாங்கியே மகிழ்ந்திடு
(வெயிலில்) துடிக்கின்ற புழுவுக்கு
நிழலையே நீகொடு
படித்திடு இவையெலாம்
உன் பிறப்பினின் மேன்மையே..

கல்வியில்லா தோர்க்கு
கற்றதைப் பகிர்ந்திடு
உற்றார் உறவினர்க்கு
உறவினைப் பகிர்ந்திடு
ஐந்தறிவு உள்ளதற்கு
அன்பதைப் பகிர்ந்திடு
அனைத்துமே அறமதே
அகமதில் இருத்திடு..

தேடுதல் செய்வோர்க்கு
தெரிந்ததை பகிர்ந்திடு
கேடுதல் செய்தாலும்
கொடுத்ததை மறந்திடு
ஓடிடும் வாழ்விது
தயங்காது தேடிடு — இன்றே
நாடிடு அறம் செய
நாளை நிச்சயம் அல்லவே

ஊ.. ல.. மு ள.. கவியரங்கம் 13. 09. 2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14. 'வேற்றுமையில் ஒற்றுமை — தாய்நாடு'

இந்து சமுத்திர முத் தென வந்தவர்
அழைத்து மகிழ்ந்தது நம்நாடு..
பொங்கி எழும் அலை வந்து கரைதொடும்
மாகடல் சூழ்ந்தது நம்நாடு ..

போதி மரத்தடிப் புத்தரின் பாதம்
பதிந்து சிறந்தது நம்நாடு..
இந்து கிறீஸ்தவம் இஸ்லாம் மதங்கள்
சிறந்து விளங்கும் நம்நாடு ..

சிங்களம் செந்தமிழ் ஓங்கிஒலித்து
சீர் பெற்றுத் திகழ்வது நம்நாடு
சிங்கள(வ)ர் தமிழர் சோனகர் பறங்கியர்
ஒன்றாய்க் குலவும் நம்நாடு ..

சிங்கமதை(வாளேந்திய)க் கொடியாகவே கொண்டு
சுதந்திரம் பெற்றது நம்நாடு
சீகிரியா அதை சிறப்பின் சின்னமாய்
பேணி மகிழ்வது நம்நாடு ..

புத்தர் சிவன் நபி ஆதாமினது என
பாதச் சுவட்டினைக் கொண்டுமே
(சிவனொளிபாதமலையில் கொண்டுமே)
அத்தனை இனங்களும் ஒன்றாக ஒருமித்து
ஒத்தை (இறைவன்) யென உணர்த்துவது நம்நாடு

கௌதம புத்தரின் தந்தம் தலதாவிலே
வெள்ளரசுமரம் அனுராதபுரத்தில் கொண்டுமே
பாடல்பெற்ற கோணேச்சரத்துடன் கேதீச்சரமும்கொண்ட
இராவணன் (சிவபக்தன்) சீருடன் ஆண்டது நம்நாடு)
குருதியிலும் வியர்வையிலும் பேதங்கள் தானில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியினிலும் மதத்தினிலும் பேதங்களை வளர்க்காது
மனிதம் என்ற ஒருபதத்தை நம்மதமாய் நாம் பேணி
ஒருகுலமாய் இச்சிறுகுடிலில் சீராக வாழ்ந்திடுவோம்..
ஒருகுலமாய் இச்சிறுகுடிலில் சீராக வாழ்ந்திடுவோம்..

ஊலமுள குழும கவியரங்கம் — 18.07.2021
மதம் இனம் மொழி சாதிபேதமின்றி வேற்றுமையிலும்
ஒற்றுமையுள்ள நமது தாய் நாட்டின் சிறப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ. மெட்டுக்குப் பாட்டு..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15. ஏன் தெரிந்தாய் எமனே...

ஏன் தெரிந்தாய் எமனே
ஏன் தெரிந்தாயோ ..
ஏன் எடுத்தாய் எமனே
ஏன் எடுத்தாயோ..

ஏன் தெரிந்தாய் எமனே
ஏன் தெரிந்தாயோ...

என் உயிரை நீ எடுக்க எத்தனையோ வழி இருக்க இந்த
வழி ஏன் எடுத்தாய் எமதர்மனே..!
என் உயிரை நீ எடுக்க எத்தனையோ வழி இருக்க இந்த
வழி ஏன் எடுத்தாய் எமதர்மனே..!
ஏன் எடுத்தாய் எமனே
ஏன் தெரிந்தாயோ..

நான் இறந்த காரணத்தை மருத்துவ முடிவதென்று ஏன்
உரிமை நீ எடுத்தாய் கொரோனாவே!
நான் இறந்த காரணத்தை
நீ உரிமை எடுத்ததால்
என் உரிமை நான் இழந்தேன் அறியாயோ!
ஏன் எடுத்தாய் எமனே
ஏன் தெரிந்தாயோ..

பெட்டியினுள் மூடையிலே பெருங்குரல் தானெழுப்பி
முட்டி மோதி விழுந்தடிக்க ஆருமில்லை
கட்டி அழ மனைவி இல்லை
பெத்த பிள்ளை கொள்ளி இல்லை
எட்டி நிற்க வைத்ததென்ன நானறியேன்
ஏன் தெரிந்தாய் எமனே
ஏன் தெரிந்தாயோ!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தலுக்குள் படுத்துறங்கும் பாக்கியமும் அமையவில்லை
மந்திரமும் ஓதவில்லை நீ அறிவாய்
சொந்த பந்தம் அருகிலில்லை
பந்தமதும் பிடிக்கவில்லை
முந்தி வந்த வினையதுவோ நானறியேன்..

சொந்தங்களும் தூக்கவில்லை
சந்திகளில் பறையுமில்லை
முந்தி வந்த வினையதுவோ நானறியேன்...

ஏன் தெரிந்தாய் எமனே
ஏன் தெரிந்தாயோ ..
ஏன் எடுத்தாய் எமனே
ஏன் எடுத்தாயோ.. ..

ஊ.. ல.. மு.. ள குழுமம் மற்றும் அமெரிக்க தமிழ் வானொலி
இணைந்து நடாத்திய இணைய வீடியோ மூலமான
நிகழ்வு — மெட்டுக்குப் பாட்டு 04. 07. 2021
மெட்டு — ஏன்பிறந்தாய் மகனே ஏன் பிறந்தாயோ
கொரோணாவினால் இறந்த ஆன்மாவின் அழுகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16. நாடாள நல்லோனைத் தேடு

நாடாள நல்லோனைத் தேடு
நல் வாக்கு ஒன்றையே போட்டு
நாடாள நல்லோனைத் தேடு
நல் வாக்கு ஒன்றையே போட்டு

வாக்கு அது வேட்டு
வாக்கு அது வேட்டு
வீணோரை நீ விலக்க வே..

ஐந்தாண்டிலே தான் வந்தது
பந்தா விட்டு ப ணியவைத்தது

நீ தேடும் வேட்பாளர்
ஊர் உ ருவாக்கும் உத்தமரோ
நீ தேடும் வேட்பாளர்
ஊர் உ ருவாக்கும் உத்தமரோ

தேசம் உயர் வேற
நீ போடு உன் வாக்கை யே

நாடாள நல்லோனைத் தேடு
நல் வாக்கு ஒன்றையே போட்டு
வாக்கு அது வேட்டு
வாக்கு அது வேட்டு
வீணோரை நீ விலக்க வே
நாடாள நல்லோனைத் தேடு
நல் வாக்கு ஒன்றையே போட்டு

மணி மாளிகை மாடங்களும்
மணியான தார் பாதைகளும்
தருவோனை நீ தானே தேடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவாக்கு உன்வாக்கினால்
தருவோனை நீ தானே தேடி
தெரிவாக்கு உன்வாக்கினால்

தேசம் தொழும் தலைவன்
தனை தெரிவாக்க வாக்கொன்று தான் போதுமே

நாடாள நல்லோனைத் தேடு
நல் வாக்கு ஒன்றையே போட்டு
வாக்கு அது வேட்டு
வாக்கு அது வேட்டு
வீணோரை நீ விலக்க வே

நாடாள நல்லோனைத் தேடு
நல் வாக்கு ஒன்றையே போட்டு

ளை.. ல.. ழ.. ள குழுமம் மற்றும் அமெரிக்க தமிழ் வானொலி
இணைந்து நடாத்திய இணைய வீடியோ மூலமான
நிகழ்வு — மெட்டுக்குப் பாட்டு 11. 07. 2021
மெட்டு — நானாக நானில்லைத் தாயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17. கவிதை நான் எழுதவா..

கவிதை நான் எழுதவா
காலம் பதில் சொல்லுமா..
கவிதை நான் எழுதவா
இணையத் தளத்தில் உலவி வருமா

உந்தன் அழைப்பை.. உள்பெட்டியில் பார்த்து.. மகிழ்ச்சி
கொண்டேன் நான்
கவிதை நான் எழுதவா
இணையத் தளத்தில் உலவி வருமா

ஓய்வு பெற்றதன் பின் வீட்டில் இருப்பதனால்
தமிழை அணைப்பதென நினைத்தேன்
எண்ணம் தெளிவாக முடியவேயில்லை
முகப்பில் கவிதைகளைப் பார்த்தேன்
எண்ணமும் மலர்ந்தது
முகப்புத்தகம் இணைத்தது
கவிதை ஆசைகள் துளிர்த்த நேரம்
நீயும் எனை அணைத்துக் கொண்டாய்
எந்தன் எண்ணங்கள் சிறக டித்துமே
கவிதை என்று பிறந்ததுமே
கவிதை எனதெனினும் ஊற்று நீ தான்
கவிதை நான் எழுதவா
பின்னூட்டல் தான் கிடைக்கு மா..

குமரி தானமிழ்ந்து உன்னைக் குலைத்தாலும்
உலகில் மூத்தவள் நீதானே
கடலில் அமிழ்ந்தாலும் கனலில் கனன்றாலும்
கணனி மொழி யாகினாயே
(இன்று – கணனி மொழி யாகினாயே )
பொன் முகம் பார்க்கிறேன்
முகப் புத்தகம் பார்க்கிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில் என் முகம் பார்க்கிறேன்..
அதில் உன்நிழல் பார்த்து மகிழ்கிறேன்
இந்த பொன்னான தருணமதிலே
கோர்வை நான் கோர்க்க வேண்டும்
(சொற் கோர்வை தான் கோர்க்க வேண்டும்)
கவிஞர் பெரியோரின் பின்னூட்டல் தான்பெற்று
கவிகள் நான் எழுத வேண்டும்
தமிழ்க் கவிஞனாக வே வேண்டும்
கவிதை நான் எழுதவா
இணையத் தளத்தில் உலவி வருமா

உந்தன் அழைப்பை உள்பெட்டியில் பார்த்து
அக மகிழ்ந்தேன் நான்
கவிதை நான் எழுதவா
கவிதை இணையத் தளத்தில் உலவி வருமா

ஊ.. ல.. ழ.. ள குழுமம் மற்றும் அமெரிக்க தமிழ் வானொலி இணைந்து நடாத்திய இணைய வீடியோ மூலமான நிகழ்வு — மெட்டுக்குப் பாட்டு 09 .09. 2021

மெட்டு — பூவே பூச் சூடவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈ. கவிதையில் கலைச்சொற்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18. 'கவியும் கவியரசும்'

**(தரப்பட்ட கலைச்சொற்கள் தடித்த எழுத்தில்)**

முத்தமிழ் அதுவே **நித்திலம்** தமிழுக்கு
பொத்தியே பேணிய பொக்கிசம் தானே
கத்தியே குமரியை **புணரியது** விழுங்க
எத்தியே **துன்னியதை** சொத்தாக்கி மகிழ்வோம்..

**நித்திலம்** சுமக்கின்ற சிப்பியைப் போல
**நித்தமும் பனுவலே** கற்றிடில் **ஏமம்**
இத்தரையில் செந்தமிழில் முத்திரை பதித்த
பத்தரை **ஏமமது** பைந்தமிழ்க் கவிதையே..

**குழவியின்** அழுகை கிழவியின் **புணரி**
இளமையின் **ஏமம் இமிழுடன்** இணைத்து
வளமான **பனுவலை** வரிசையில் அடுக்கி
குழலாலும் **இமிழ்க்கலாம்** என்றவர் கவியரசே..

வாலிப **ஏமம் குழவியின்** பிறப்பு
வாழ்வதன் **எறுழ் பனுவலின்** சிறப்பு
வாழ்க்கையில் **ஞமன்** வர நமக்கதோ இறப்பு
வாழ்வுடன் **துன்னியதோ** கவிதையின் துடிப்பு
இதுவே கவியரசில் எமக்கான படிப்பு

உள்ளத்தில் **ஞெள்ளல்** உறைந்து இருந்தாலும்
கள்ளமில்லா **ஏமம்** கலந்து களித்திடினும்
**ஞெள்ளலை** நோக்கியே வெள்ளம் பாய்ந்திடினும்
மெள்ளவே இசைத்திடும் **நண்ணிய இமிழ்களே**

பனுவலைத் **துன்னி** பாதனைப் புனைந்து
**மருப்பினைப்போட்டு** சினிமா புணரியில் கலந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மருப்பினைப்**போட்டு (இசை, இலக்கணம் என) சினிமா
புணரியில் கலந்து
**எறுழ் ஏமம்** பெற்று என்றுமே வாழும்
கவி கண்ணதாசன் **குழவியைப்** பேசுவோம்

கவிதைகளில் கலைச்சொற்கள் —
'தேடல்' காணொளிக் கவித்திறனாய்வு அரங்கு — 27. 06. 2021

1. **ஏமம்-** களிப்பு, பொன், இரவு, வலிமை, மயக்கம், இன்பம்
2. **புணரி-** அலை, கரை, கடல், தனிமை
3. **குழவி-** குழந்தை, புல், பெருமை
4. **ஞெள்ளல்-**சோர்வு, பூசல், மிகுதி, குற்றம், பள்ளம், வீதி
5. **எறுழ்-** தடி, தூண், வலிமை
6. **நித்திலம்-** முத்து
7. **நண்ணிய-**பொருந்திய, செய்யவல்ல
8. **இமிழ்-** ஒலி
9. **துன்னல்-** தைத்தல், சிறுதிவலை, நெருங்கல்
10. **பனுவல்-** சொல், நூல், கல்வி, கேள்வி
11. **மருப்பு -** இஞ்சி, யானைத்தந்தம், மாக்கொம்பு, இருகோடு
12. **ஞமன்-** யமன், துலாக்கோலின் சமன்வாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19.வாடி பெண்ணே கூடி வாழ்வோம்.
## (கிராமத்துக் கவிதை)

கோடுபோட்ட சேலைகட்டி
ஆடி **அசும்பி** போறவளே
**கூழை**சூட மாலைதாறேன்
**மொய்யாக** நீ வாடிகண்ணே... 2

காளையவன் கருங்காலி
காரிகைநீ **பாற்**கோடு
**கூழை**யது கருமேகம்
குறும்பற்கள் குறுணலடி.. 4

வாழையதன் இளம்தண்டாய்
வளம் **ஒள்**கொள் மேனியடி
காளையெனை உன் **அசும்பால்**
கோழையாக்கிப் போகாதே.. 6

மயிலை அன்னவளே
மானின் மிரட்சியடி
கயலின் கண்ணதுவே
காளையெனை **மொய்**க்குதடி.. 8

பயிலும் அன்னநடை
மனப்புயலுடன் **பிடுகு**தடி
ஓயிலாய் ஓடுறியே
ஒருக்கால் எனைப் பாத்துப்போடி.. 10

**தூர்தல்**வேண்டாம் துக்கம் வேண்டாம்
**துவ்வு**விளையும் பூமிஇருக்கு
**மரி**வாரி **தூர்தல்** செய்தால்
மனம்போல் வாழ்வு வாழ்ந்திடலாம்..12


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அசும்பில்**தானே நாற்றை நட்டு
**வாரி**யது **தூர்தல்** செய்தால்
ஏர்பிடித்து **ஏற்றம்** செய்வோம்
என்னவளே ஏக்கம் விடடி..14

**மொய் அத்தம்**தான் **ஒள்**அதுஎன்ற
**நீண்மொழி**தான் **ஒள்** அதன்றோ
**மொய்**யாக நாம் வாழ்வதற்கு
**அத்தம்** அதுவே **அசும்பு** கொள்வாய் ..16

**பிடுகு** ஒலித்தே **வாரி** பெய்யும்
மாரிவெள்ளம் **வாரி** அடையும்
**குடிலம்** வேண்டாம் வாடி புள்ளே
குடிலதெனினும் குலாவி வாழ்வோம்..18

**கோடு** போன்ற உன்கழுத்தில்
**குடிலம்** இன்றி தாலி கட்டி
வாடிபெண்ணே கூடி வாழ்வோம்
நாடுபோற்ற நாமும் வாழ்வோம்
வாடிபெண்ணே கூடிஒன்றாய்
வையகத்தில் வளமாய் வாழ்வோம் ..

கவிதைகளில் கலைச்சொற்கள் —
கிராமத்துக்கவிதை
'தேடல்' காணொளிக் கவித்திறனாய்வு அரங்கு — 26.09.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20. வரட்சி ...

**கொண்டலது** பொய்த்ததனால் **பண்டலுமே** வரண்டாச்சு
**கொண்டி** விளைநிலமே கொடிய கடுந்தரையாச்சு
பெண்டிரது நகைநட்டும் பேசாப் பொருளாச்சு
கொண்ட **உவலையது** இறைவனுக்கும் **இமிழலையோ..**

கானலினால் **ஏனமதும்** கருக்கட்டியும் கனலாச்சே
கானமிசை **வேயதுவும்** கனல்பற்றி அனலாச்சு
**மோனநிலை** கொள்**மருகம்** மௌனநிலை கொண்டதுவோ
வானகமே **கனுனகற்றி** கொண்டல்வர வழிவிடம்மா..

மோன நிலைதனிலே வானகமும் தானிருக்க
வானமுறை தேவனவன் **கவணைத்**தான் **மாட்டினனோ**
வானமழை காத்திருந்து **ஏனமெலாம் கன்துயின்றும்**
**ஏமமுடனே** இறங்கிவர **வேட்டமின்றி** பூட்டியதேன்..

வானமது பொய்த்ததனால் வயிறெல்லாம் அனலாகிறதே
**நேமி**யது தான்வற்றி வெண்உப்பும் விளைகிறதே
நெல் இழுத்த **குந்தமெலாம் மந்தமாகி** மடிகிறதே
**மேதினியின்** செழுமையது மெதுவாக மறைகிறதே..

ஏருழுத **ஏனலையும்** ஏரியாய் இருந்ததையும்
**ஏதமின்றி** கூறுபோட்டே இயற்கையை **இரியல்** செய்தோம்
வானுயர்ந்த காடுகளை வரையின்றி தானழித்து
வளமாக்கல் என்றுசொல்லி வானதனை ஏய்க்கச் செய்தோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானமூதும் தன்மகவை தானே ஈனவேண்டும்
**ஏமமுடன்** இருக்கையிலே எண்ணியதை நல்கவேண்டும்
காலமது கரையமுன்பு கைக்கொரு மரத்தைநட்டு
கானலாகும் எம்நிலத்தை காத்துமே **கொண்டி** பெறுவோம்

கவிதைகளில் கலைச்சொற்கள் —
தேடல் காணொளிக் கவித்திறனாய்வு அரங்கு —25.07. 2021

1. **கனுள் -** கடிவாளம், தாக்குதல்
2. **இரியர் -** ஆசிரியர், பொருள், கெடச்செய்பவர்
3. **கொண்டி -** உணவு, கப்பம், கொள்ளை, மிகுதி
4. **வேய் -** மூங்கில்
5. **கொண்டல் -** மேகம், மழை, மகளிர் விளையாட்டு
6. **ஏனல்-** செந்திணை, தினைப்புனம், கதிர்
7. **நேமி -** வட்டம், மோதிரம், தேர், கடல், உருளை
8. **வருகம் -** மயில்தோகை
9. **உவைல -** துன்பம்
10. **குந்தம் -** குதிரை, கம்பம்,
11. **வேட்டம் -** வேட்டை, கொலை, விருப்பம், சாரம்
12. **ஏதமில் -** குற்றமிலாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உ. கிராமத்துப் பாடல்கள்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21. தாலாட்டு — கற்கண்டே நீ உறங்கு

ஆராரோ ஆரிவரோ
ஆரமுதே கண்ணுறங்கு..
சீராரும் பைங்கிளியே
செல்வமே கண்வளராய்..

முத்தே மரகதமே
முழுவயிரமே உறங்கு..
முன்னூறு நாள் சுமந்த
முழுநிலவே தானுறங்கு..
முற்பிறப்பின் சொத்தாக
முந்திவந்தவா உறங்கு..
இப்பிறப்பின் பொக்கிசமே
என்துரையே நீயுறங்கு..

அப்பனது பெயர்சொல்ல
அருமருந்தாய் உதித்தவனே..
ஆத்தாளின் தாய்மையதை
அலங்கரிக்க வந்தவனே..
அன்பான உறவுகட்கு
அப்சரசாய் வந்தவனே..
அம்பலத்தாடி தந்த
அருமைத்துரை நீயல்லவோ..

எட்டுமுழச் சேலையிலே
எட்டடியில் ஏணைகட்டி..
பட்டுப் போல பாலனுக்கு
பஞ்சணையும் தானிணக்கி..
மொட்டவிழா மல்லிகையே
பெட்டகமே உந்தனுக்கு..
கட்டிவைச்ச ஏணையிலை
என்கற்கண்டே கண்ணுறங்கு.. ..

கவிதைத் தூவானம் — கவிதைப்போட்டி — 27.09.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22.ஆசையுள்ள அத்தானே ஆடுமேய்க்கப் போகலாமா..?

ஆசையுள்ள அத்தானே
        ஆடுமேய்க்கப் போகலாமா
ஆடுமேய்க்கும் சாக்கில்தானே
        ஆசைக்கதைகள் பேசலாமே..

மீசைவைச்ச எந்தன்மச்சான்
        மினைக்கெடாமல் வாருமையா
ஓசையின்றி பேசித்தீர்ப்போம்
        ஒளிச்சுவைச்ச உள்ளக்கதையை

ஓசையின்றி ஓடும்ஆட்டை
        ஒழுங்குபடுத்தி மேய்த்தல் போல
ஆசையையே பகிர்ந்துகொளலாம்
        ஆசைமச்சான் அருகில்வாடா

ஆத்தங்கரையை அளந்துபார்ப்போம்
        வீசும்தென்றலின் விலையைக்கேட்போம்
சேத்து மலரின் அழகைக்காண்போம்
        என் செல்வமே நீ விரைந்து வாடா

கட்டுச்சாதம் கொண்டும் வாறேன்
        தொட்டுக்கொள்ள தயிரும்தாறேன்
காட்டுமரத்தின் நிழலில்நானே
        ஊட்டிவிடுறேன் உண்டுமகிழ்வாய்.. 10

உண்டகளைப்பும் தீரமச்சான்
        உறங்கிவிடலாம் எந்தன்மடியில்
முறுக்கிவைச்ச மீசைமுடிதான்
        என்மிருதுவான தொடையைத் தொடாமல்..12

அறுக்கைவேணும் அணையும் வேண்டும்
        அபலையான பெண்எனக்கு
சுறுக்காய் சொந்தமாக்கி விட்டால்
        மறுக்குமோ என் பெண்மை சொல்லு..14

கோடைமுடிய ஆவணியில்
        கொடியமழையே தொடரமுன்னம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாடையாக கதையைப்பேசி
தாலிகட்ட வழியைப்பாரும்.. 16

ஊருக்கெல்லாம் கொரோணாஎண்டு
உள்ளம்தளர வேண்டாம் மச்சான்
பேருக்காக பதிவு செய்து
பெரியகோவிலில் முடிச்சைப்போடும்..18

முடிச்சைப்போட்டு உடைமையானால்
உரிமையோடு என்னைத்தாறேன்
மனைவிஎன்ற மகுடத்துடனே
மன்மதக்கலை மகிழ்வாய்ப் பயில்வோம்.. 20

**கவிதைத் தூவானம் – "கிராமிய கீதம்"**
**கவிதைப் போட்டி 21. 07. 2021**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23. கைப்பிடிக்க வாடா என் கறுத்த மச்சானே

பொற்பலகை போட்டுப் பூப் பந்தர் நாட்டியே
முற்பிறப்பு பந்தமதை முழுமை யாக்கவே
உற்றவர்கள் சுற்றவர்கள் நிறைந்த சபையிலே — நீயும்
கைப்பிடிக்க வாடா என் கறுத்த மச்சானே

பட்டுவேட்டி சரசரக்க எந்தன் மச்சானே
கொட்டுமேளம் விண்ணைமுட்ட தட்டிக் கேட்கவே
புட்டுப் புட்டு மந்திரத்தை பார்ப்பர் ஓதவே — நீயும்
தொட்டுத் தாலி கட்டி உந்தன் சொந்தமாக்கடா

தொட்டுத் தாலிகட்டி நெற்றிப் பொட்டும் வைத்துமே
மெட்டி பூட்டி அருந்ததியை எனக்குக்காட்டடா
பொத்திவைத்த கட்டுச்சாதம் உனக்குத்தானடா — உன்
சொத்தை நீயும் சுவைகெடமுன் ருசித்துப் பாரடா

மொட்டவிழ்ந்த போதே மலர் நுகர வேண்டுமே
கெட்டுவிட்டால் பாலதுவும் திரைந்து போகுமே
பட்டறிய வேண்டுமடா மன்மதக் கலை
கட்டழகா வாடா என் கறுத்த மச்சானே..

கட்டிலிலே கதைகள் பல படிக்க வேண்டுமே
கடிதெனிலோ காமனிடம் கேட்க வேண்டுமே
பட்டிதொட்டி எங்கும் எங்கள் பரம்பரை என்று
கட்டியாள வேண்டுமடா கறுத்த மச்சானே

கட்டிவைத்த தாலி பொட்டு பூவுடனேயே
குட்டிபோட்ட பூனைபோல உன்னைச் சுற்றியே
வட்டம் போட்ட எந்தன்தாழ்வு கறுத்தமச்சானே
உன்மடியில் சாய்ந்து முடியவேண்டும் ஆசைமச்சானே.

**கிராமியப்பாடல் — (பிரதேசசெயலக கலாசாரநிகழ்வு)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24. காத்திடுவேன் இது சத்தியம்

அத்தையின் மகளே எந்தன்
ரத்தினநிலவே உன்னை
கைத்தலம் தான் பிடித்து..

சித்திரப்பாவை உன்னை
இத்தரை மீதில்தானே
சத்தியம் அக்கினியில் செய்து..

இத்தலமீதில் வாழும்
மெத்தவும் போற்றும் மாந்தர்
பெற்றவர்களுடன் சாட்சியாக..

அக்கினி சாட்சியாக
அருந்ததி வழியைச் சொல்லி
அறவோர் மந்திர ஒலிமுழங்க..

பத்தரைத் தங்கமதனில்
முத்திழைத்து தாலிசெய்து
முத்துக்கழுத்தினில் மணநாண்பூட்டி..

மொத்தமாய் என் சொத்தாக்கி
மெத்தையில் கவிபடித்து
வித்தைகள் தனைக்காட்டி யே..

வித்தகியாய் விளக்கேற்ற வந்தவளே
எத்தகைய இடர்வரினும்
பொத்திஉனை காத்திடுவேன்..

இதுசத்தியம் என்
உத்தமியே உணர்ந்திடம்மா...

'கவிதைக்குவியல்' கிராமியப்பாடல் — 13.09.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25. ஓரவிழிப் பார்வையாலே..

ஓரவிழிப் பார்வையாலே
என்னைக்கட்டிப் போட்டவளே
பாரமுள்ள எந்தன் நெஞ்சை உன்
பார்வையாலே புரட்டினாயே
ஏர்பிடித்து உழுதகைகள் உன்
கார்குழலைத்தான் வருடி
வார்ந்தெடுத்த உச்சிமோந்து
சேர்ந்திருக்க விரும்புதடி..

பார்த்ததிலே இந்தச்சோடி
பாரினிலே சிறந்ததென்று
ஊர்க்கதைகள் உரத்துக்கேட்க
உள்ளமது தவிக்குதடி
பேர்சொல்ல செல்வமொன்று
பேறாகத்தான் பெற்று
மார்பினிலே தான்அணைக்க
மனசுஆசை கொள்ளுதடி..

பார்மயிலே பருவத்தேதான்
பயிர்செய்தால் விளையுமடி
கார்மேகம் கண்டால் தான்
கானமயில் ஆடுமடி
சீர்கொண்ட செல்வமெல்லாம்
சிதையமுன்பு உன்னையடி
ஊர்க் கோயிலிலே மாலைமாற்றி என்
உடையவளாய் ஆக்கிடுறேன்..

**எழுத்தாணி கிராமியப்பாடல் — 07 .03 .2021**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26. குறுகுறுக்கும் பார்வையாலே ..

குறுகுறுக்கும் பார்வையாலே
கிறங்கடிக்க வைத்தவளே
விறுவிறென விரைவதெங்கே
விடையதனைக் கூறிச்செல்லு..

சலசலெனக் கொலுசொலிக்க
தலைச்சுமையாய்ப் போறவளே உன்
கலகலென்ற சிரிப்பொலிதான்
கலக்குதடி என்மனசை..

மொழுமொழென முகிழ்ந்தமுகம்
முழுநிலவாய் தெரியுதடி
வழுவழுத்த உறவுவேண்டாம்
வாடிஉன்னைக் கட்டிக்கிறேன்..

நெடு நெடென வளர்ந்த கொடி
கொழு கொம்பை நாடுதடி
விடு விடென விரையுதடி
விடலைப் பருவமடி..

தடதடென அடிக்குதடி
என்னிதயம் உனைநாடி
படபடப்பு வேண்டாமடி
பக்கத்த்திலை வாடிபுள்ளை..

குளுகுளென்ற கூதற்காலம்
கூடுதடி குறும்புக்காரி
கதகதப்பாய் கதைஎழுத
கழுத்தைத்தாடி தாலிகட்ட..

கவிதைத்தூவானம் — 23. 09. 2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27. ஏர்ப்பாட்டு — கார்காலம் தான்பிறந்து ..

கார்காலம் தான்பிறந்து
கணக்காய் மழைபெய்திருக்கு
சீராக சீதனத்தை
ஏர்பிடித்து தான்உழுவோம்
பாருக்கே படியளக்கும்
பண்பான பூமியடா
கூரான கொழுவாலே
சோராது சீர்செய்வோம் .. ..

மஞ்சவண்ணா தடிஎடுத்து
செஞ்ச நுகத்தடியில்
பஞ்சுபோல பாரமிலா
பலா ஏர்க்கால் பூட்டினனே
அஞ்சவேண்டாம் செல்வங்களே
அருளாமலே இழுங்கோ
பஞ்சியின்றி போறதுக்கு(மேழியை)
பதமாகப் பிடிக்கிறனே

ஏர்ப்பாட்டு நான்படிக்கேன்
என்னருமை செல்வங்களா
சோர்வாக இல்லாமல்
சுறுக்காக நடவுங்கடா
பார்முழுதும் பகலாக்கும்
பகலவன் பார்க்கமுன்னே
வீடேக வேணுமடா
விரைவாய் அடிவையுங்கடா .. ..

சென்றபோக வைக்கலது
செல்வங்களுக்கு காத்திருக்கு
மென்றுதின்று அசையெடுத்து
மெல்லியதாய் கண்துயின்று
வென்றிடலாம் களைப்பதனை
வெயில்பிடியா குடிலிருக்கு
சென்றிடுவோம் செல்வங்களே
சோராமல் நடவுங்கடா..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28. அத்தானே ஓனக்காக ஆசையில் ஓர் கடிதம்

(வெளிநாட்டில் வாழும் கணவனுக்கு)

அத்தானே ஓனக்காக ஆசையாய் ஒருகடிதம்
பொத்திப்பொத்தி வைத்ததையே புத்திகெட்டு எழுதுறனோ
பெத்தவர்கள் கடன்தீர்க்க பெருந்தேசம் போனவரே
முத்தெடுக்க சிப்பியதை சிதறடித்து விடலாமோ

முத்தான பல்லழகா உன்முகம்பார்க்க துடிக்குதடா
குத்தாத மீசையதை குறுவிழிகள் தேடுதடா
ஒத்தையாய் நானிருந்து உருகாமல் உருகிறனே
சொத்தான என்னவளேன சுறுக்காக வாவனய்யா..

தத்திவந்து தமிழ்பேச தலைசீவி நான்மகிழ
கத்திக்கரையும் காக்கைக்கும் கையாலே தான்கொடுக்க
புத்திகெட்ட நரிக்கதைகள் கூறியே தூங்கவைக்க
பெத்தமகன் என்றணைக்க பெருஞ்செல்வம் வேணுமையா..

இத்தரையில் நாம்பிறந்து வாழ்வதுவோ சிலகாலம்
இத்துணை எனதெனவே இணைந்திருப்பது சிறுகாலம்
முத்தங்கள் முனகல்கள் முழுவதுமோ முதற்காலம்
முத்தழகே முழுமனசாய் விரைந்தோடி வாருமையா..

கொத்தாக குலைஈனும் கொழுகொழென்ற தென்னையுண்டு
மொத்தமாய் மொறுங்கன்தர முழுவயல்கள் காத்திருக்கு
ஒத்தையிலை நீநடக்க ஒருங்கிவர நானிருக்கேன்
புத்தியுடன் வாருமையா புதுவாழ்வு வாழ்ந்திடுவோம்...

நாட்டார்பாடல் கவிதைத்தூவானம் — 01.11.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29. நாலுமூலை வயலுக்குள்ளை நாத்து நடும்..

நாலுமூலை வயலுக்குள்ளை தானே தன்னானே
நாத்துநடும் கண்ணுகளா தானே தன்னானே
சோற்றுக்காக சேற்றினிலே காலைவைத்துமே
சேர்ந்து நாற்று நட்டிடுவோம் தானே தன்னானே..

ஆணும்பெண்ணும் ஒன்றுசேர்ந்தால் தானே தன்னானே
ஆ காததுமே ஒன்றுமில்லை தானே தன்னானே
சேரப்போகும் வாழ்வை நினைச்சுநீரைப் பாய்ச்சடா
ஓரக்கண்ணின் பார்வை வேண்டாம் தானே தன்னானே... ..

அத்தை மகனே ஆசைத்துரையே தானே தன்னானே
என்ஆசை உனக்குப் புரியுதாடா தானே தன்னானே
மொத்தமாக என்னைத்தாறேன் தாலி கட்டடா
உன்சொத்துத்தான்டா என்துரையே தானே தன்னானே.. ..

மொட்டவிழ்ந்த மலரது தான் தானே தன்னானே.
மணம் வீச வேணுமடா தானே தன்னானே
பெட்டியுள்ளே பொக்கிசமாய் பூட்டியே வைத்தால்
கட்டித்தங்கம் கரித்துண்டுதான் தானே தன்னானே.. ..

தையினிலே நெல் விளைய தானே தன்னானே
தட்டுடனே வந்திடடா தானே தன்னானே
பொட்டுப்போட்டு தாலிகட்டி சொந்தமாக்கடா
எட்டுப்பிள்ளை பெத்துத்தாறன் தானே தன்னானே.. ..

ஐயனாரு கோவிலிலே தானே தன்னானே
தெய்வமெண்டு மீசைவைச்ச சாமி தன்னானே
தெய்வமெண்டு நீஎனக்கு தெரியுறாய் மச்சான்
பொய் இ தில்லை சிறுக்கி எனக்கு தெய்வம் நீயடா.. ..

நாட்டார்கவிதை — கவிதைத்தூவானம் — 06.12.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30. கலங்காதே ராசா காலமது பிறக்குமடா

உழவு பொய்த்ததெண்டு
உடைஞ்சுபோய் இருக்கும் மச்சான்
உன்னவள் நான் அருகிருக்கேன்
உன்மனசை விட்டிடாதே
இழவு நடந்ததுபோல்
இடிஞ்சுபோய் இருக்கிறியே
இஞ்சைபாரு என்முகத்தை
என்மடியில் நீ உறங்கு .. .. ..

வட்டிக்குப் பணமெடுத்து
வயலை விதைக்கையிலை
வானமது பொய்த்ததனால்
வயல்விளைச்சல் போனதெண்டு
முட்டியிலை முகம்புதைத்து
முழுவதையும் இழந்ததுபோல்
மூணாம் நபர்போல
முகம்திருப்பி இருப்பதென்ன.. .. ..

கட்டிக்கரும்பே எந்தன்
கானம்பாடும் கருங்குயிலே
தட்டிக்கொடுக்க மச்சான்
தங்கமகள் நானிருக்கேன்
வெட்டிவிடத் தழைத்துவிடும்
வெண்மூங்கில் மரம்போலே
வெட்டிவிடு உன்துயரை
விடியலது பிறக்குமெல்லோ.. .. ..

நிலவிருந்தால் இருட்டுமுண்டு
நீ இதனையும் அறிவாய்
புலவுஅது பிழைத்திருக்கில்
விளைவுவரும் மறுபோகம்
செலவுசெய்த செல்வமெல்லாம்
தேடிவரும் தெளிந்திடுநீ
கலங்காதே என்ராசா
நல்லகாலமது பிறக்குமெல்லோ.. .. ..

கிராமியப் பாடல் — கவிதைத் தூவானம் — 17.01.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31. சுகவாசல்.. கிராமத்துச் சாரல்

முழுநிலாவதுவே முற்றத்திலெறிக்க
முழுக்குடும்பமும் தானே சுற்றியிருக்க
காய்ச்சிய கஞ்சியை அம்மாவும் பகிர
ஆ..ஊ.. போட்டுமே அனைவரும் குடிக்க..

அம்மா உரலில் நெல்லையே குற்ற
குத்தின நெல்லையே ஆச்சி புடைக்க
முன்வந்த உமியதை அடுக்களைக்காக்கி
பின்வந்த தவிட்டினை மாட்டிற்கெடுத்து
அடுத்ததாய்வந்ததை குறுணல் என்றெடுத்து
அலைகின்ற குஞ்சுக்கும் கோழிக்கும்போட்டு
உலைவைக்கும் அரிசியை பெட்டியுள்போட்டு
குலையாமல் குசினியுள் குனிந்து செல்வாளே..

விளைகின்ற நெல்லிற்தான் விடிந்த கண் முளிப்பு
ஏர்கொண்டு விளைந்தால்தான் விடியுமே வீட்டின்துடிப்பு..
கண்கொண்ட தூரமதில் கடல் கொண்ட களிப்பு
கண்மூடா நுரைபொங்கி எமைஓங்கி அழைக்கும்
பண்பாடி படகோட்டி பக்குவமாய்வாழ
பலவளமும் பகிர்ந்தவள் கடலன்னைதானே..

சுற்றமும் சூழலும் ஒற்றுமையாய் இருக்கும்
சுகமான சுகாதார சூழல்கொண்ட பூமி
இத்தரையில் நாம்வாழ என்னதவம் செய்தோம்
மொத்தத்தில் சொர்க்கத்தின் வாசல்இதுதானோ..

படக்கவிதை — செந்தமிழ்க்கவி குடும்பம்
14வது போட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 32: மாந்தோப்புக் கிளியே மனசெல்லாம் நீதானே.. ..

மாந்தோப்புக் கிளியே மனசெல்லாம் நீதானே
பூந்தோட்டக் காரனது புலம்பலது கேட்கலையோ...
காந்தம்போல் கவர்ந்திழுத்து கட்டிவைத்த கற்பகமே
பேந்த விழிக்கவிட்டு பெருந்நேரம் போனதுமேன்..

சேர்ந்தங்கு செருக்கலிலே செல்லக்கதை பேசியதும்
ஊர்பார்த்துவிடும் என்று நான் சேர்க்கநீ ஓடியதும்
கார்கூந்தல் கன்னிகையே கணப்பொழுதில் நீ மறந்து
ஊர்தாண்டி மணம்செய்ய உன்மனசு ஒத்ததுவோ..

ஒத்தை மாட்டு வண்டியிலே ஊர்வலமாய்ப் போவமெண்டு
வித்தையாய்க் கதைசொன்ன அத்தை பெத்தரத்தினமே
மொத்தத்தையும் கணப்பொழுதில் சுத்தமாய் மறந்து எனை
ஒத்தையாய்த் தவிக்கவிட்டு இத்தாலி போனதேனோ..

அத்தைமக ரத்தினமே ஆசை இள முத்தழகே
பெத்தவளின் சொந்தமெண்டு மனசுக்கை பொத்திவைச்சன்
பொத்திவைச்ச சொத்ததனை கொத்திக்கொண்டு போகையிலை
சித்தமெலாம் சிதறுதடி சிரிப்புத்தான் வருகுதடி..

**கிராமியப் பாடல் — கவிதைத் தூவானம் — 17.11.2021**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 33. ஓடிய மேகம் இன்று மழையாகப் பொழிந்ததடி.

ஆடியில் காத்தடிக்க அணைக்க வேண்டாம் எண்டவளே
ஆடியில் அடித்தகாத்து அணைந்ததே ஐப்பசியில்
ஓடிய மேகம் இன்று மழையாகப் பொழிந்ததடி
வாடி என் வஞ்சியே இன்பச் சுளையை நாம்
சுவைத்திடுவோம்..

வாடியே நீஇருக்க வளமான வாழ்வுக்கென்று
போடியார் வீட்டுத் தெற்குப் புறத்தினில் தானேஉள்ள
தேடிய சொத்தில்தானே திரவியம் எடுக்க வென்று
வாடியில் காத்திருந்தது வடிவாக வயல் விதைத்தேன்..

நாடியவிதியோ நல்ல பயிரெலாம் முளைத்திருந்தும்
கூடிபகாலம் வானம் பொய்த்ததால் கடினமாகி
வாடிய உன்வதனம்போலே வதங்கியே இருந்தவேளை
ஓடிய மேகம் இன்று மழையாகப் பொழிந்ததடி.

வாடியபயிர்கள் எல்லாம் மெத்தமழை பொழிந்ததாலே
தேடிய கனவான் வந்த மகிழ்ச்சியில் திளைக்குதே பார்
வாடிய எந்தன் சொத்தே வடிவாகத் தாழ்ப்பாள் போட்டு
வாடி என்னருகே முத்த மழைதனைப் பொழிந்திடுவோம்..

**கிராமியப் பாடல் – கவிதைத் தூவானம் – 27 .08 .2021**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 34. வடக்காலை வகிடெடுத்து வானில் முகிலும்..

வடக்காலை வகிடெடுத்து வானில் முகிலும் திரளுதடி
வாருங்கடி பெண்டுகளா விளைஞ்ச செந்நெல் பயிரையுமே
விறுக்காக வெட்டியதை நறுக்காக சேர்த்தெடுத்து
சுறுக்காவே சுமந்து சூடாக்க வேணுமடி..

வரம்பிலே குடைபிடிச்சு வளமாக நிற்பவரே
வானத்தைத் தான்பார்த்தீர் எம்வயிற்றைப் பார்த்தீரா
இரும்பான உங்கள்மனம் இளகாதோ கேளுமையா
கரும்பான எம்பேச்சை கொஞ்சம் காதால கேளுமையா..

கறுப்பாடு சொல்லுகின்ற கனகதைகள் வேண்டாமடி
வெறுப்பான கதைசொல்லி வீண்பொழுது போகுதடி
முறுக்கான கதைசொல்லி முரண்பட்டு நிற்காமல்
பொறுப்போடு வாருங்கடி பொலியதனை காருங்கடி..

விளக்கீடு கழிஞ்சாலே வடக்குமழை பெய்யாது
கிழக்காலை வந்துதெண்டால் கேளாது பெய்யுமையா
வெளுப்பான வேட்டிகட்டி வெள்ளாண்மை செய்பவரே
விளக்கம்தான் கேளுமையா வீண்வார்த்தை வேணாமையா..

மறக்காமல் மருதனுக்கு மாவிளக்கு போடுமையா
குறைக்காமல் குல்லநெல்லை குலத்தானுக்கு குடுங்கள்ஐயா
நிறத்தோடு திரண்டமுகில் திவலையாய்க் கலையுமையா
புறத்தாலை போகுமையா பொறுத்திருந்து பாருமையா

**முத்தமிழ்சாரல் 118வது கவியரங்கம் — 30 .07 .2021**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 35. இயற்கையைப் போற்று இயமன் விரட்டு..

பச்சைப் பசேலென எங்குமிருந்தால்
இச்சை போல மூச்சிழுப்பாய் — உன்
இச்சை போல இயற்கையை அழித்தால்
நச்சு வாயுவால் பேச்சிழப்பாய்

பாயும் நதியும் அணைத்து வருமே
விளையும் மூலிகை செடி கொடிகளையே
நீயும் அதில் நீராடி மகிழ்ந்தால்
நோயும் அணுகாது அதை அறிவாய்...

உண்ணும் உணவை பதனிடுதல் என்று
பண்ணும் கலப்படம் அறிவாயோ — உன்
எண்ணம்போலவே பயிர் விவசாயம் செய்தால்
உண்ணும் உணவில் நச்சுப் பொருளில்லை ...

உடலையும் உளத்தையும் உனக்களித்தவனே
உலகையும் படைத்தவன் தெரிந்து கொள்வாய்
படைத்தவன் படைப்பினை காத்திடு நீயே
உன்னையும் உலகையும் காத்திடலாம்

இறைவன் படைத்த இயற்கையை என்றுமே
இயல்பாய் இருக்க விடு மனிதா
இயற்கையை அழித்து இன்னலைத் தேடி
இயமனை நீயே அழைப்பதும் ஏன்...

பொங்கு தமிழ்க் குழுமம் — 28 .08 .2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 36. காலைக் கருக்கலிலை .. குன்றின் குரல்

காலைக் கருக்கலில கனத்த பனிமூட்டத்தில
சேலை வரிஞ்சுகட்டி செங்குத்தான மலைமுகட்டில்
காலைக் கடிக்கவரும் கறுத்தஅட்டை தனைவெலக்கி
வேலைக்குப் பெயர் பதிஞ்சு விறுக்காகப் போறவளே..

அன்றலர்ந்த தளிர்களையே ஆசையாகத் தடவி
குன்றின் குளிரதனில் கொழுந்துகளையே பறிச்சு
இன்று என்உழைப்பிதென்று கூடையிலே போடுறியே
நின்று எனைப்பார்த்து உன் இதயத்திலை போடுபுள்ளை..

காலை மாலையென்று காத்திருக்கேன் கண்மணியே
மலையோ மடுவுமெண்டு பாத்திருக்கேன் ஒனக்காக
சிலையோ ஒன்மனசு சிறிதளவும் இளகலையே என்
நிலையோ ஒனைத்தானே நித்தமுமே சுத்துதடி..

உறுமீன் வருமளவும் காத்திருக்கும் கொக்காட்டம்
வருமீன் நீ வருமளவும் வருசமெல்லாம் காத்திருப்பேன்
ஒருக்கால் எனைப்பாத்து ஒன் சம்மதத்தைச் சொல்லிவிடு
மருதே மருக்கொழுந்தே என் மாமன்மக ரத்தினமே..

சிறுகச் சிறுகச்சேர்த்து சின்னத்தாலி கட்டுறனே
சிறுகுடிலில் சிறுக்கிஒன்னை சித்திரமா வைக்கிறனே
மறுவார்த்தை வேண்டாமடி மருதசாமி சத்தியமா
சிறுவார்த்தை சொல்லிடடி நாம் சீர்சிறப்பாய் வாழ்ந்திடலாம்

**கவிதைக்குவியல் — குன்றின் குரல் — 16 .06 .2021**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 37. என்னுயிரே அழகு..

கன்னக்குழி அழகு கண்ணுக்கு மையழகு
காதோர லோலாக்கு கன்னத்துக்கு தனியழகு
சின்னஞ்சிறிய இடை என் சித்திரத்துக்கே அழகு
சிற்றிடையின் ஒட்டியாணம் சிங்காரி உனக்கழகு..

வாரி வழிந்தசடை வாலிபத்துக்கே அழகு
சீவிவார்த்து முடிந்தசடை செல்லமே உனக்கழகு ..
சங்குக் கழுத்தழகு சத்தமிடும் மிடறழகு அங்கு
தொங்கி மெருகூட்டும் மெத்தனங்கள் தானழகு

முத்துப் பல்வரிசை முத்தழகே உனக்கழகு
மூக்குத்தி ஒளிருகின்ற மூக்கதுவும் தானழகு
மொட்டாய் மலர்ந்திருக்கும் கொவ்வைநிற உதடழகு
பட்டாய் பளபளக்கும் பரந்தசெவி தானழகு ..

காலுக்குக் கொலுசழகு என் கண்மணிக்குப் பேச்சழகு
வேலுக்கு வேட்டுவைக்கும் விழியதுவும் தானழகு
நூலிடையைத் தாங்கிநிற்கும் வாழைமடல் தொடையழகு
ஆலிலையைத் தானெடுத்த அடிவயிறும் தானழகு

எத்தனையைச் சொல்லியென்ன இதயமதை உள்வைத்து
பத்துமாத காலத்திலே பிரமன் படைப்பு அழகு
மொத்தமாய் உன்உருவம் எந்தனுக்கே அழகு
சொத்தாகப் போறவளே என்னுயிரே நீஅழகு..

**பொங்கு தமிழ்க் கவிஞர் குடும்பம் — 21 .05 .2021**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 38. உசிரே உருகாதே ஒனக்காக நானிருக்கேன்...

பாட்டுப்பெட்டி கையிலேந்தி கோடுபோட்ட சேலைகட்டி
பாட்டுக்கேட்டு பாவைநீயும் பார்வையாலே சொல்வதென்ன
பூட்டுப்போட்டு வைத்தபெண்மை கரைஉடைக்கப்
போடுமெண்டு
நோட்டம்போட்டு என்னவளே உன்னவனை நொந்தனியோ...

பெண்டுகளின் நாலிலொண்டு பேசலையே உன்னிடத்தில்
கண்டுகொண்டேன்காதலியே கவலைகொள்ள வேண்டாமடி
கொண்டைதன்னில் பூவும்சூடி பொட்டுமிட்டுத் தாலிகட்ட
கண்டம்தாண்டி வந்திடுவேன் கனிமொழியே காத்திரடி ...

ஆண்டுமூண்டு போனதெண்ட ஆசைக்கனவு தெரியுதடி
வேண்டுகின்றேன் என்னவளே வேல்முருகன் பாதமடி
பால்குடமும் காவடியும் நாமெடுக்க நேர்த்திவைத்தேன்
வேல்விழியே விலகாதே விரைந்துவர வேண்டிடடி ..

தோண்டத்தோண்ட ஊற்றெடுக்கும் சொக்கத்தங்கச்
சுரங்கமடி
தொடரப்போகும் சொந்தத்துக்கு தோள்கொடுக்கும் பந்தமடி
மூண்டுவிட்டால் மோகமுள்ளாய் முழு உடலும் உருகுமடி
உசிரே நீஉருகாதே உனக்காக நானிருக்கேன் ..

**கவிதைத்தூவானம் 13. 08. 2021**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 39. விறகொடிக்கப் போறவளே ..

வேகாத வெயிலினுள்ளே விறகெடுக்கப் போறவளே —உன்
போதாத சுமையை நீயும் இறக்கிவையேன் உதவிடுறேன்

வீட்டினிலேஉலைகொதிக்க உன்னுயிரைப் பணயம்வைத்து
காட்டினிலே விறகுவெட்ட கனதூரம் போறவளே
கூட்டைவிட்டு வெளியேவாடி குடும்பமாய் நாம்சேர்ந்து
பாட்டுப்பாடி மகிழச்சியாய் வாழ்ந்திடலாம் விடைகொடடி

கட்டாந்தரையில் பட்டுமெல்லோ பாதமது பழுக்குதடி
வெட்டவெளியில் நீநடக்க வெயிலுமெல்லோ காய்ச்சுதடி
பட்டமரம் நீசுமக்க பாவிநெஞ்சம் கலங்குதடி
பொட்டுவைச்சு கட்டிக்கிறேன் கிட்டவாடி பெட்டகமே

மொட்டுவிட்ட இளமையது கெட்டுவிடப் போகுதடி
கட்டுக்கட்டாய் தடிவிறகு தான்சுமக்க கருகுமடி
சுட்டிப்பெண்ணேசுறுக்காயே உன்பதிலைக் கூறனடி — தாலி
கட்டிவிட்டால் தயங்காதே தடையேதும் இல்லையடி

கவிதைத்தூவானம் 10 .06 .2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 40. ஒத்தையிலே நிக்கிறனே ஒன்நினைப்பு வாட்டிடத்தான் ....

முத்தத்தில் தானமர்ந்து முழுநிலவின் ஒளியினிலே
அத்தைதந்த நிலாச்சோற்றை அரைஅரையாய் தின்றதுவும்
கொத்தக்கொத்த இட்டமுட்டை பத்திரமாய்த் தானெடுத்து
பொத்திக்கொண்டு நீவரவே சத்தமின்றிப் பகிர்ந்ததுவும் ..

புத்தகத்தில் மயிலிறகு குட்டியது போட்டதென்று
சத்தம்போட்டு நீமகிழ மொத்தமாக ரசித்ததுவும்
பெத்தவர்கள் கண்டுவிட்டால் பெரும்புயலே வீசுமென்று
சத்தமின்றி முத்தங்களைச் செத்தையருகில் பகிர்ந்ததுவும்...

பொத்திவைச்ச பொக்கிசமாம் பெரியவளாய் விட்டதென்று
சுத்திவர கொல்லைபோட கொலுகொலென்று நகைத்தவளே
என்சொத்ததுவே போனதென்று சோகத்திலே துவண்டுநிற்க
அத்தனையும் உன்மனத்தில் சுத்தமாக மறந்ததேனோ ..

மொத்தத்தில் நீஎனக்கே சொந்தமென்று நானிருந்தேன்
பெத்தவர்கள் பார்த்தவனை முழுமனதாய் நீஏற்று
அவன் சொத்தாக சோடியாக சொகுசாகப் போனவளே
ஒத்தையாய் நிக்கிறனே ஒன்நினைப்பு வாட்டிடத்தான்

கவிதைக் குவியல் 10.08.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 41. கும்மியடி ...

கும்மியடி பெண்ணே கும்மியடி
குதூகலமாகவே கும்மியடி
கம்பம் சுழற்றிடும் காளையர் களிப்புற
கன்னியரே கூடிக் கும்மியடி..

பெண்ணாய்ப் பிறந்திடில் பேதையென்று எண்ணாமல்
ஒன்றாகக் கூடியே கும்மியடி
பெண்களுக்கேயான பெருங்குணம் நான்குமே
காத்திடுவோம் என்று கும்மியடி..

பெண்களே வீடொன்றின் கண்களே என்றுமே
பெருமைகொண்டே நீயும் கும்மியடி..
பெண்ணாய் பிறந்திட பெருந்தவம் செய்திடல்
வேண்டுமென்றே கூறிக் கும்மியடி..

பெண்களே ஆண்களின் வெற்றியின் பின்னாலே
பெருத்த சக்தி என்று கும்மியடி — இந்த
உண்மைதனை உலகே அறியட்டுமே
உரத்துமே நீ பாடிக் கும்மியடி..

வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைத்தகாலம்
வேட்டினால் தீர்ந்ததே கும்மியடி
கூட்டாகவே சுமை தாங்கிடுவோமெண்டு
பாட்டினாலே சொல்லிக் கும்மியடி..

பாட்டுப் படித்துநீ கைகளைத் தான்கொட்டி
பாவையரே சேர்ந்து கும்மியடி..
பாரினில் பாரதி கண்ட புது மைப்பெண்ணை
பார்த்திடுவீர் என்று கும்மியடி..

**கவிதைத்தூவானம் — 11. 11. 2021**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 42. மாட்டு வண்டிச்சவாரி — சோடியாய் ரெண்டுமாடு..

சோடியாய் ரெண்டுமாடு பூட்டியே வண்டிரெண்டு
ஓடியே துள்ளிப்பாய்ந்து ஓடுதே ஊர்போய்ச்சேர
பாடியே பரபரப்பாய் ஓடுவோம் என்றுசொல்லி
ஓட்டியும் உரக்கச் சூசூசூ சொல்லியே சுறுக்காய்ப் போறான்..

காட்டையே ஊடறுக்கும் கறுத்ததார்போட்ட கல்றோட்டு
போட்டதால் லாடன் காலில் பொத்தென நொந்திடாமல்
பூட்டிய வண்டில் பொழுதுசாய முன்பேசென்று
வீட்டையே சேரஎன்று விரையுதே வண்டிரெண்டும்..

வயற்காட்டிலே விளைந்த நெல்லு வண்டியில் மூட்டையாக
வாயில்லா ஜீவனுக்காய் வைக்கோலும் தான்நிறைத்து
போட்டியாய் ஒன்றுக்கொன்று புழுதிமண் தான்கிளப்பி
காட்டையே ஊடறுத்து கனத்தபாரத்துடனே செல்லும்..

வீட்டிலே விளக்குவைத்து விரல் நிலம்கீறித்தானே
பூட்டிய மாட்டு வண்டில் புகும் நேரம் பார்த்திருப்பாள்
ஊட்டவே அரிசிச்சோற்றை உருட்டியே காத்திருப்பாள்
ஓட்டியும் இவற்றை எண்ணி வேகமாய் உசுப்புறானே..

வீட்டினில் விளைந்த நெல்லு குவிந்துமே தான்கிடக்க
நாட்டினில் உள்ளோர்க்கெல்லாம் உணவளிப்பது நாமே என்று
பாட்டினில் பாடிப்பாடி பருவ தாபங்களைப் பரிமாறி
மீட்டிடும் வீணையாக விளையுமே வீட்டில் வாழ்வு.

**தேனீ கலை இலக்கிய மன்றம் — 09.09.2020**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 43. நிலவுக்குத் தாலாட்டு .. பாடல் ..

நிலவுக்குத் தாலாட்டு —எந்தன்
நெஞ்சிலே நீபாடு ..
உறவுக்குத் தாலாட்டு —உயிரே
உள்ளத்திலே ஊற்று..

இதயத்தில் உந்தன் நினைவினைச் சுமந்து
இருவரும் ஒன்றாய் ஒருமனமாகி
பாசத்தில் பிணைத்த பைங்கொடியே எந்தன்
பசுங்கிளியே செல்லம் பருவத்தைப் பிழிவோம்..

அத்தையின் மகளே முத்து ரத்தினமே
முழுநிலவே எந்தன் முதுசமே வாராய்
மொத்தமாய் உன்னை என்சொத்ததுவாக்கி
வித்தைகள் செய்வோம் விரைந்துமே வாநீ..

பத்தது சென்றால் பத்திரமாக
பத்ததி சொல்ல சொத்தது தானே
தொட்டிலில் கிடத்தி தொடர்கதை எழுத
தொட்டுமே தாலி கட்டிறன் வாடி..

முத்தமிழ்ச் சாரல் — 12.07.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 44. தந்துவிட்டேன் என்னை..

காளைமாடு ரெண்டு பூட்டி
களனிநோக்கிச் செல்லும் மச்சான்
வேளையோடு திரும்பி வரணும்
விளக்கு வைச்சுக் காத்திருப்பேன்..

தொட்டுத்தாலி கட்டி என்னைப்
பொட்டும் வைத்துச் சொந்தமாக்கி
விட்டுவிட்டு களனி செல்ல — மரக்
கட்டையோ உன்மனசு மச்சான்..

ஏர்பிடிச்சு உழவு செய்து
ஊர்சிறக்க உணவு பெருக்கி
பேர்சிறக்க மகவும் வேணும்
நீர்நினைத்து வாரும் மச்சான்..

காளைமாட்டின் சலங்கைச் சத்தம்
காதில்ஒலித்து இரவை மீட்கும்
கட்டில்மீது கொலுசு ஒலிக்க
எட்டிவைத்து வாரும் மச்சான்..

முந்திச்செய்த வினையின் பயனாய்
கந்தன் அருளால் சொந்தமானேன்
தந்துவிட்டேன் என்னை உனக்கு
பந்தம் என்ற கதை படிக்க..

கவிதைக் குவியல் — 17 09. 2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45.பேரழகிக் கொண்டையிலை பூஅள்ளிச் சூடட்டுமா

பேரழகிக் கொண்டையிலை பூஅள்ளிச் சூடட்டுமா
ஊரறிய தாலிகட்டி என் உடமையாக்கட்டுமா..

அத்தமக ரத்தினமே முத்துவட கழுத்தழகே
சித்தம் சிறைந்த எந்தன் சின்னவிழிப் பூச்சரமே
அத்தானின் சொத்தாக அத்தாணி மண்டபத்தில்
ஒத்தொலிக்கும் மந்திரத்தில் ஒருபாதி ஆக்கிடவா..

தாலிகட்டி தலைகுனிந்து தரணியதை நீஅளக்க
வேலிஅது என்றுவந்தோர் வெட்டிப் பேச்சாய் ஒலிக்க
வாலிபங்கள் ஒன்றுசேரும் வழிஇதென்று வரவேற்க
போலி நாணம் வேண்டாமடி பொன்னழகே பெட்டகமே..

காஞ்சிப்பட்டு நீயுடுத்தி கனத்த மல்லிச்சரம் சூடி
கஞ்சத்தனம் வைக்காமல் கார்சடையை அலங்கரித்து
மஞ்சள் முகம்பூசி மருதாணி கைக்கிட்டு
நெஞ்சில் குடியிருக்கும் தேவதையே நெருங்கிடடி..

இதழவிழ்ந்த பூவுக்குள்ளை இருக்குதடி தேனமுது
இனிக்கின்ற வாசத்தில்தான் புசித்திடுமே பூவண்டு
இருவருக்கும் விருந்ததுதான் இருக்குதடி இல்லறத்தில்
இதயங்கள் இணைந்திடினே இனிக்குமடி இல்லறமே..

கவிதைத்தூவானம் 14. 11. 2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 46. தாலாட்டு — ஐரை மீனும் ஆரைமீனும்..

பொழுதுசாயும் வேளையிலே ஓடமதன் பாய்விரித்து
பழுதில்லாத வலையுடனே பாசத்தையும் தான்சுமந்து
எழுந்துஅடங்கும் அலையைக்கிழித்து
எண்ணங்க ளையும் சுமந்துகொண்டு
தொழுதுஅப்பன் கிளம்பியுள்ளான்
அழுதிடாமல் தூங்குகண்ணே .. ..

எட்டுமுழச் சேலையிலே என்செல்லத்துக்கு ஏணைகட்டி
பட்டுமெத்தை தானமைத்து பாலன்நீயும் படுத்துறங்க
விட்டுச்செல்ல மனமில்லாமல்
தொட்டுத் தூக்கி தான்மகிழ்ந்து
கட்டுமரம் ஏறிச்சென்றார்
கண்துயில்வாய் கண்மணியே .. ..

நடுக்கடலில் படுத்தவலை விடுத்திடுமே நம்வறுமை
தொடுத்துமுள்ள தோழருடன் துணையாகச் சென்றானப்பன்
— கை
எடுத்துத்தொழும் கண்ணபிரான்
கருணையினால் கரைசேர்வான்
படுத்துறங்கு பாலகனே
பசுங்கிளியே கண்ணுறங்கு .. ..

ஐரைமீனும் கரைக்குவரும் ஆரைமீனும் பறிநிரப்பும்
தொரைஉனக்கு தோள்வலிக்க தோணிமுட்ட மீன்நிறையும்
கரைதனில்நான் காத்திருந்து
காலையிலே அப்பனைநான்
துரையைபோல அணைத்துவாறேன்
செல்லதுரையே நீ உறங்கு.. ..

**கவிதைத்தூவானம் 12. 05. 2021**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 47. வீரம் விளைந்த மண்.. ..

வீரம்கொண்ட மன்னர்கள்

விடுதலைக்குமுன் ஆண்டதனால்..

இது வீரம்விளைந்தமண்

அவ்வளவே வேறொன்றுமில்லை ..

விளைநிலங்கள் எல்லாம்

வேளாண்மை செய்யாது எம்

வெளிநாட்டு மோகத்தால்

தரிசாகக் கிடக்குதே

ஏனென்றால்

இது வீரம்விளைந்தமண் ..

பத்தாவது படிக்கும்போதே

எத்தேசமாவது எப்படியோ போகவெண்டு

உத்தேசமாக உசாராக இருந்ததனால்

எம் சொத்தான கல்வியில்

கடைநிலையைத் தானடைந்தோம்..

ஏனென்றால்

இது வீரம்விளைந்தமண்..

கடன்பட்டார் நெஞ்சம்போல்

கலங்கினான் இலங்கைவேந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கதைமறந்த

பகட்டான வாழ்வு வாழ

நுண் கடன்பட்டு

கண்போலக் காத்ததை

கந்தலாக்கி நிற்கிறோம்

ஏனென்றால்

இது வீரம்விளைந்தமண் ..

கூட்டுக் குடும்பமென்று

குதூகலித்து நின்ற நாங்கள்

கூட்டிக்கொண்டு போய்

காணாமல் போன எம்

கண்ணான உறவுகளுக்காய்

றோட்டினில் கொடி பிடித்து

கூட்டமாய் நிற்கின்றோம்

ஏனென்றால்

இது வீரம்விளைந்தமண் ..

தொழிலொன்றுமே வேண்டாம்

எளிதான வழியதுண்டு

போதையிலே புரையோடி

பாதையிலே பவிசுகாட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாள்கொண்டு வால்காட்டி
வளமோடு நாம் வாழ்வோம்
ஏனென்றால்
இது வீரம்விளைந்தமண் ..

கோவிலுண்டு குளமுமண்டு
கோடி கொட்டி நாம் அமைத்த
கோபுரங்கள் தானுமுண்டு
கோவிலுள்ளே குடியிருக்கும்
சாமியது தூக்குதற்கு
சாலைபோடும் பெக்கோ வேண்டும்
ஏனென்றால்
இது வீரம்விளைந்தமண் ..

பெற்றவர்கள் பேணுதலே
உற்ற எங்கள் கடமை என்ற
முற்றிய வார்த்தை தன்னை
முழுதாக மறந்த விட்டோம்
குற்றமில்லா மகிழ்ச்சியோடு
குடும்பமாய் நாம் களிப்போம்
பெற்றவரைப் பேணுதற்கு
மற்றவனின் விடுதிபார்ப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனென்றால்

இது வீரம்விளைந்தமண் ..

வீரம் விளைந்ததென்று

வீறாய்ப்புத்தான் பேசி

சோரம் போனதையா

சொந்தங்கள் இன்று மண்ணில்

வீரம் விளைந்த மண்ணை

விலைபேசி வெளியாருக்குத்தான் கொடுத்து

வெளிநாடு போய்வாழ்வோம்

வேதனை தான் கொள்ளவேண்டாம்

வெளிநாட்டில் நாம் வாழ்வோம்

வெளியார் நம் மண்ணில் வாழ்வார்

ஏனென்றால்

இது வீரம்விளைந்தமண் !! !!

**செந்தமிழ்க்கவி கவிதைக் குழுமம் 18 .12 .2020**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 48. தரணியெல்லாம் எங்கள் தாயகமே

பிறந்த தாயகத்திலிருந்து
வறுமை துரத்தியதால்
குறுகிக்கிடவாமல் எகிறிஓடியுமே
கிளறிப்பயிர்செய்து கீர்த்தியுடன் வாழ்கின்றோம்
இன்று அங்கேநாம்
**வந்தேறு குடிகள்....**
கறுவிக்கொண்டு எம்மீது
முறுகலைக் கட்டவிழ்த்துவிட
புறங்காட்டி ஓடுமாப்போல்
பறந்தோடி பன்னாட்டிலும் காலூன்றி
சிறப்பாக நிற்பதனால்நாம்
கிறங்காத **புலம்பெயர் குழுமத்தவர்..**
தரப்படுத்தல் என்றுதானே
கல்வித் தனிக்கதவைத் தான்சாத்த
விருப்புடனே கல்விகற்க
விளைநிலத்தை தான் வித்து
வெளிநாட்டில் கல்விகற்று
களவாக வேலைசெய்து
கல்வியிலே தடம்பதித்த
**மாணவசமூகம் ..**
சிறுபான்மை என்பதனால்
ஒறுத்தொதுக்கி ஒண்டியாக்க
பொறுத்தோம் போதுமென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுக்கிச்சேர்த்துவைத்த
பொன்பொருள்தனைக் கொடுத்து
பிறநாடுதான்சென்று அறிவாலே சாதித்தோம்
இன்றுநாம் **பிறநாட்டு அறிவுச்சமூகம்..**
பொறுப்பில்லா முறையாலே
புறப்பட்ட பயணமது
குறித்தஇலக்கை அடையாமல்
குறைவழியில் நின்றதனால்
குறுகிச் சிறைகளிலே
குறைவாழ்வு வாழ்கின்றோம்
**சிறைக்கைதி** என்ற பெயருடனே..
இல்லிடத்தை தான்துறந்து
இக்கரைக்கு அக்கரைபச்சை என
இரவல்நாட்டுக்கு இடம்பெயர்ந்து
இன்னல்களுடன்
இரவல்வாழ்க்கையதை
அல்லலுடன் வாழ்கின்றோம்
**அகதி** என்றபெயருடனே
ஆம்
என்னபெயர் சொன்னாலும்
இன்று தரணியில் நாம் இல்லாத இடமில்லை
ஏன்றதனால்
தரணியெல்லாம் எங்கள் தாயகமே

கவிதைக் குவியல் — 05.09.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊ. இணையவழிக்கவியரங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 49. கவியரங்கம் —நாடு வல்லரசாக எது தேவை — கல்வி, விவசாயம், தொழிலுற்பத்தி, ஏற்றுமதி —எனது தலைப்பு கல்வி

**தமிழ் வணக்கம்:**

முதல்மொழி உலகின் மூத்த மொழி
முதல் நான் உரைத்த மொழி —என்னை
அவையில் முந்தி இருத்திய மொழி — என்
முதல் வணக்கம் உந்தனுக்கே தமிழன்னையே

**தலைமை வணக்கம்:**

வல்லரசுக் கனவினை கவிதையில் நனவாக்கி
சொல்லரசர் சொல்கின்ற நான்கு தலைப்புக் கவிதைகளை
மெல்ல உமிழ்ந்து அசைபோட்டு அவைக்கு அதன்
வல்லதன்மை உரைக்கவந்த தலைமைக்குத்தலைவணக்கம்

**அவை வணக்கம்:**

அடங்காத தாகமிது எந்தனுக்குப் பலநாளாய்
முடங்கியிருந்த போது முழுமூச்சாய் மாறியதே —
கொரோணாவால்
முடங்கியிருந்த போது முழுமூச்சாய் மாறியதே
தடங்கலின்றி தமியனேன் தமிழ்க்கவிதை சமர்ப்பிக்க
உடனிருந்து உற்றபிழை மன்னிப்பீர் அவையோரே

**துணைத்தலைப்பு:**

**கல்வி**

வல்லரசு வல்லரசுஎன்று சொல்லாடல் செய்கின்றோம்
சொல்லாலே வல்லரசு என்னவென்று அறிவோமா..

அனைத்துலக முறைமையிலே மேலோங்கி நிற்கவேண்டும்
அனைத்துலக நிகழ்வுகளில் செல்வாக்குச்செலுத்த வேண்டும்
அடுத்தவனின் பிரச்சனையில் ஆதிக்கம் செலுத்தவேண்டும்
அனைத்துமே நாமென்று அடுத்தவனுக்குப் புகட்டவேண்டும்

வல்லரசின் சொல்லினாலே சொல்ல வந்ததென்ன வென்றால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லாடல், தொடர்பாடல், கல்வியூடு கருத்தாடல்
நில்லாமல் நிதிவளமும் நீக்கமற நிறைந்திருந்தால்
சொல்லாமல் வருமையா பெயர் வல்லரசென்று..

கல்லாமல் விவசாயம், உற்பத்தி, ஏற்றுமதி செய்தாலும்
சொல்லாலே வெல்ல எம்மால் முடியாதே அறிவீரோ
பொல்லாத பொய்களையும் சொல்லி உண்மையாக்குதற்கு
கல்லாமல் இருந்துவிட்டால் கடுகளவும் கைவராதே..

விவசாயம் செய்தென்ன அறிவின்றி விளையாதே
உற்பத்தி செய்தென்ன கண்பொத்தி வாங்கிடிலேல்
ஏற்றுமதி செய்வதற்கும் ஏற்பவர்கள் வேண்டுமன்றோ
கூற்றொன்றே நீயறிவாய் கல்வி இதைத் தீர்க்குமன்றோ..

கல்வியதில் கரைகண்டு கனதுறையில் கால் வைத்து
காலத்துக்கேற்றபடி கனத்த தேடல்கள் செய்து
கோலோச்சி குவலயத்தை விரல்நுனியில் கட்டிவைத்தால்
மேலான தேசமெல்லோ மெதுவாய் நீவல்லரசே

சொல்லிவைத்த உண்மையிது சொல்லாடல் கோர்வையிது
கல்வியினில் தலைநிமிர்ந்தால் நல்லரசாய் நாடமையும்
எல்லாரும் உனைஅணைப்பர் உலகமுமே உனதடியில்
சொல்லாமல் வல்லரசாய் சூடிடுவாய் மணிமுடியே

**நன்றி நவிலல்**

நாவினால் சொல்லாமல் இணையவழி சொன்னஇந்தப்
பாவினைப் பரிகசிக்காது பாங்குடனே கேட்டிருந்த
பாவலர்கள், பாரறிந்த ஆர்வலர்கள், பாமரர்கள்
ஆர்வமுடன் கேட்ட அத்தனை அன்புள்ளங்கட்கும்
கூறுகிறேன் நன்றியதை கூப்பியே இருகரமும்.

**முத்தமிழ்ச்சாரல் 109வது கவியரங்கம் — 21.07.2021**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 50. கவியரங்கம் — எதனைத் தெரிவு செய்வீர் — உறவு, நிம்மதி, பணம் — எனது தலைப்பு நிம்மதி

**தமிழ்வணக்கம்:**

அகிலத்தின் ஆதிமொழி அகழ அகழக் கிடைக்கும் மொழி
அமுதாய் இனிக்கும் அன்னைத் தமிழ்மொழியே— உன்னை
அவையில் கவிபடிக்க ஆண்டவனைத் தானிறைஞ்சி
அன்புடன் வணங்கி நின்றேன் மறவன்புலோ அம்பலமே..

**தலைமை வணக்கம்:**

கணேசனுக்கு முதல் வணக்கம்..
எடுத்த செயல் தடக்காது எழுத்ததுவும் பிசகாது
என்மனதில் வீற்றிருந்து அருள்புரிவாய் — அப்பனே
அண்ணனும்தம்பியுமாய் இணைந்திருக்கும் தலைமையாம்
கணேசன் காரத்திகேயன் தலைமையை தலைபணிந்து
'நிம்மதி' க் கவிதைதனை நிம்மதியாய்ப் படிக்க
நின்னருளை எந்தனுக்குத் தா.

**அவை வணக்கம்:**

'நிம்மதி'யில் நிம்மதியாய்க் கவிபடிக்க நிற்கின்றேன் இன்று
நிரையில்நின்று தடைமருந்து ஏற்றியதால் நிமிர்ந்து நின்று
நிரைநிரையாய் என்வரிகள் கோர்க்கும்போது கவிவரிகள்
அரைகுறையாய் அமைந்துவிடில் மன்னிப்பீர் வையோரே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துணைத்தலைப்பு:**

**நிம்மதி:**

துணைத்தலைப்பு மூன்றுதந்தீர்துணிவுடன் எழுதவென்று
பணத்தோடு பட்டபாட்டால் பிணமாகிப் போனதாலும்
குணத்தோடு உறவிருந்தும் பணத்தால் அது பறந்துபோக
வணக்கத்துடன் 'நிம்மதி'யில் கவிபடிக்க விழைகின்றேன்..

உறவிருந்தால் உபத்திரவம் உண்மையது புரிவீரே – இதை
உரைக்குதே இலக்கியங்கள் உரைகல்லாய் உணர்வீரே
தம்பியால் தானிழந்த இராவணனின் இராச்சியமும்
நம்பியே தானழிந்த நல்லதங்காள் நவில்வதுவும்..

பணத்தாலே பிணமும் வாய் திறக்கும் என்பார்கள்
குணம்போகும், குலாவிய சனம் போகும் பணம்வந்தால்
மணம் வீசும் மணவாழ்வும் பணத்தாலே பறிபோய்
பிணமாகும் பலவாழ்வு தினந்தோறும் செய்தியதே..

குடிப்பது கூழானாலும் குதூகலம் அங்கே வேண்டும்
படுப்பது பாயானாலும் பாசம்அங்கு பொங்க வேண்டும்
உடுப்பது கந்தையானாலும் உணர்வுகள் உறுத்த வேண்டும்
கொடுப்பது அவல்எனினும் கோ எனினும் அன்புவேண்டும்

பாசம் அன்புடனே அங்கே குதூகலம் நிறைந்திருந்தால்
வாசமாம் மலரைப்போலே வாழ்வது அமையும் தானே
நேசமாய் வாழ்வமைந்து நிம்மதிக் காற்று வீசின்
ஆசையாய் வீசும் அங்கு வசந்தமாய் அனைத்தும் தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிம்மதி நிறைந்த வாழ்வில் நிலைக்குமே செல்வமெல்லாம்
நீடித்த வாழ்வுக்காக தொலையுமே நோய் நொடிகளெல்லாம்
தேடியே வந்து சேரும் உறவுகள் உலகம் எல்லாம்
வேடிக்கை வினோதமாக விளங்கும் விரைவில் வாழ்வு

**நன்றி நவிலல்:**

இணையவழி சொன்ன இந்த 'நிம்மதி' க் கவிதை தன்னை
இன்முகம் கொண்டு இறுதிவரை கேட்ட
பன்முகம் கொண்ட பாவலர்கள் ஆர்வலர்கள்
பாரறிந்த பெரியோர்கள் பண்பான பாமரர்கள்
பங்குபற்ற வைத்த பண்பான இயக்குனர்கள் —
அனைவருக்கும்
இங்கிதமாய் நன்றிகூறி இனிதாய் நிறைவுசெய்கின்றேன்.



நிறைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மொக்குள் நூலாசிரியர் அறிமுகம்..

## 'மறவன்புலோ' செல்லம் அம்பலவாணர்



மறவன்புலோ தந்த மைந்தன்
மண்புகழ் பரப்பும் செல்வன்
துறையது பொறியியலே எனினும்
இறைபணி செய்யும் தொண்டன்
நிறைவான குரலினாலே நாடகங்கள்
எழுதியும் நடிக்கும் கலைஞன்
துறையினில் இலங்கை அரசவிருதை
மும்முறை பெற்ற வல்லோன்
'திருமுறைச் செல்வர்' மற்றும்
'கலைத்தீபம்' 'கலாஜோதி'
'கவிமணி' 'கவிச்சுடர்' என்ற
கௌரவம் பெற்ற பேரான்
அறிமுகம் தேவையில்லை செல்லம்
அம்பலவாணருக்கே ஆனால்
கவிகளைக் கிறுக்கிடும் ஓர்
கவிஞனாய் 'மொக்குள்' மூலம்
இணைகிறான் என்று
மகிழைக்கவி சசி யவன்
முரசினைக் கொட்டிநின்றேன்.



'மகிழைக்கவி' சசி
மகிழடித்தீவு, கொக்கட்டிச்சோலை
ஆசிரியர், இர/நிவி/தலுகல த.வி

ISBN 978-955-42626-9 0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org